# மஞ்சரி



## மரகதவிழா மலர்

02.08.2023

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மஞ்சரியின் மரகத விழா மலர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மலர் விபரம்

| | |
|---|---|
| மலரின் பெயர் | : மஞ்சரி |
| இதழாசிரியர்கள் | : பெற்றோர்கள் |
| வெளியீடு | : பெற்றோர் |
| | : கிளி / இந்து ஆரம்ப வித்தியாலயம் |
| | 2023, ஆவணி |
| அச்சுப்பதிப்பு | : வேழன் பதிப்பகம், கிளிநொச்சி. |

| | |
|---|---|
| *Name of Magazine* | *: Manjari* |
| *Publishers* | *: Parents (KN/Kilinochchi Hindu P.V)* |
| *Printers* | *: Velan Printers, Kilinochchi* |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ்மொழி வாழ்த்து

வாழ்க நிரந்தரம் வாழ்க தமிழ்மொழி
வாழிய வாழியவே!
வான மளந்த தனைத்தும் அளந்திடும்
வண்மொழி வாழியவே!

ஏழ்கடல் வைப்பினுந் தன்மணம் வீசி
இசைகொண்டு வாழியவே!
எங்கள் தமிழ்மொழி! எங்கள் தமிழ்மொழி!
என்றென்றும் வாழியவே!

சூழ்கலி நீங்கத் தமிழ்மொழி ஓங்கத்
துலங்குக வையகமே!
தொல்லை வினைதரு தொல்லை யகன்று
சுடர்க தமிழ்நாடே!

வாழ்க தமிழ்மொழி! வாழ்க தமிழ்மொழி!
வாழ்க தமிழ்மொழியே!
வானம் அறிந்த தனைத்தும் அறிந்து
வளர்மொழி வாழியவே!

**-மகாகவி சுப்பிரமணிய பாரதியார்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாடசாலைக்கீதம்

வாழ்த்துவோம்! வாழ்த்துவோம்! வாழ்த்துவோம்!
கிளி இந்து ஆரம்ப வித்தியாலயம் சிறப்புற

வாழ்த்துவோம்! வாழ்த்துவோம்! வாழ்த்துவோம்!
சூழ நல்ல நெல்வயல் சுவை மிகுந்த கனிமரம்

ஓங்கி வளர்ந்த தொன்னையும் எழில் மிகுந்த காட்சிகள்
தன்னகத்தே கொண்டுமே ஜெயந்திநகர் மத்தியில்

அமைந்திருக்கும் வித்தியாலயம் என்றுமே வாழ்கவே!
வாழ்த்துவோம்! வாழ்த்துவோம்! வாழ்த்துவோம்!

அருள்புரியும் மீனாட்சி அம்மனின் ஆசியும்
அரவணைக்கும் அந்தோனியும் அருட்துணையும் கொண்டுமே

சிறப்புடன் சீரான கல்வியைப் பாலருக்கு
பல்லாண்டு வழங்கிட என்றுமே

வாழ்த்துவோம்! வாழ்த்துவோம்! வாழ்த்துவோம்!
கணிதம் சூழல் சுகாதாரம் உடற்கல்வியோடு

அகிலம் போற்றும் ஒழுக்கமும் தாய்மொழியும் கற்றுமே
கலைபல பயின்று நாம் வித்தகராகிட

வழிவகுக்கும் வித்தியாலயம் என்றுமே வாழ்கவே!
வாழ்த்துவோம்! வாழ்த்துவோம்! வாழ்த்துவோம்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரகதவிழா நாயகியின் விபரக் குறிப்புக்கள்

| | |
|---|---|
| பெயர் | : திருமதி. சுரமஞ்சரி பாலேந்திரராசா |
| பிறந்த திகதி | : 1968.03.03 |
| பிறப்பிடம் | : கிளிநொச்சி |
| தந்தை | : சுப்பிரமணியம் தேவதாசன் |
| தாய் | : தேவதாசன் நாகம்மா |
| கணவர் | : தங்கவேலாயுதம் பாலேந்திரராசா |
| பிள்ளைகள் | : நிதர்சனா, நிவேதிகன் |

| | |
|---|---|
| கற்றபாடசாலை | : கிளி / இந்து மகாவித்தியாலயம் |
| சேவைக்காலம் | : 16.03.1990 - 02.08.2023 வரை |
| | 33 வருடங்கள் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஆசியுரை

மெய்யான நல்ல ஆசிரியையாய் வாழ்ந்து எல்லோர் உள்ளத்திலும் இடம்பிடித்த மரகதவிழா நாயகி திருமதி.சுரமஞ்சரி பாலேந்திரராசா ஆசானுக்கு முதற்கண் என் நல்வாழ்த்துக்கள்

**"தாய் நிலம், தகப்பன் விதை, குரு பசளை"**

என்பதற்கிணங்க மண்ணில் ஆயிரம் சேவைகள் இருந்தாலும், ஆசிரிய சேவை என்னும் மகத்தான சேவையினை கல்விபுகட்டும் கலைகள் அறிந்து காலம்முழுவதும் சேவைபுரிந்து எல்லோர் மனதிலும் நிறைந்து ஊருக்காய் ஒளிர்ந்த ஆசிரியையின் இனிவரும் பொழுதுகள் யாவும் முழுநிலவாய் முழுமை பெற்று, இன்பம் யாவும் வாழ்வில் சூழ்ந்துவர, இல்லத்தில் இறைவன் அருளால் வழங்கள் யாவும் பெருக, வரும் நாட்கள் யாவும் இனிமையான பயணமாய்த் தொடர எல்லாம் வல்ல ஸ்ரீ மீனாட்சி அம்பாளின் நல்லருள் பரிபூரணமாய்க் கிடைக்க, அம்பாளை மனதார வேண்டி நல் ஆசிகளை வழங்கி அமைகிறேன்.

**சிவஸ்ரீ மு.மகேஸ்வரநாதக்குருக்கள்**
**ஸ்ரீ மீனாட்சி அம்மன் ஆலயம்,**
**கிளிநொச்சி.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஆசியுரை

**இறைமகன் இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் வாழ்த்துக்கள்....**

நான் வசிக்கும் எனது கிராமத்திலிருந்து ஆசிரியப் பணிக்காக தன்னை அர்ப்பணித்துக் கொண்ட சுரமஞ்சரி பாலேந்திரராசா அவர்களுடைய 33 ஆண்டுகள் ஆசிரியர் சேவைக்காக கடவுளை நான் துதிக்கிறேன். ஆசிரியப் பணி என்பது அறியாமையின் இருளை நீக்குகிற உன்னத பணி. எங்கள் எதிர்காலம் எங்கள் மாணவச் செல்வங்களில் தங்கி உள்ளது. மாணவர்களின் எதிர்காலம் அவர்தம் கல்வியில் தங்கியுள்ளது. தங்கள் வாழ்க்கையின் அஸ்திபாரத்தை ஸ்தாபிக்கிற வயதில் உள்ள எங்கள் பிள்ளைகளுக்காக நீங்கள் ஆற்றிய பணி அளப்பரியது. தாங்கள் ஓய்வு பெற்றாலும் கூட எம் சமூகத்துக்கு தங்கள் பணி தொடர வேண்டும் என்று வாழ்த்துவதுடன், எல்லாம் வல்ல இறைவனுடைய நாமத்தில் ஆசீர்வதிப்பதுடன், நீங்களும் உங்கள் குடும்பமும் நலமுடன் வாழ்ந்திட வாழ்த்துகிறேன்.

இறைபணியில்,
*Pastor.* டேவிட் பிரேமானந்
**தலைமைப்போதகர்**
**எக்காளத்தொனி ஊழியங்கள்**
**வன்னிப்பிராந்தியம்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கோட்டக்கல்விப் பணிப்பாளரின் பார்வையில் ஓர் வாழ்த்துரை....

யாழ் மண்ணிலிருந்து வன்னிப் பெருநிலப்பரப்பு நோக்கிய குடியேற்றத்திலே ஜெயந்திநகரைத் தளமாகக் கொண்ட கிளி/ மண்ணிலே தளமமைத்து அக்காலத்திலே காடுகளைக் கழனிகளாக்கி திருமதி. சுரமஞ்சரி பாலேந்திரராசா அவர்கள் தற்போதைய கிளி/கிளிநொச்சி இந்துக் கல்லூரி முன்னர் கிளி/ கிளிநொச்சி இந்து மகா வித்தியாலயமாக இருந்த காலத்திலே ஆரம்பக்கல்வி முதல் உயர்கல்வி வரை கற்றவர். இளமையில் சிறப்பான துடியாட்டமும், எதையும் பார்த்தவுடன் அதே போல் உருவகிக்கும் கற்பனைத் திறனும் கொண்டவர். கிளிநொச்சியில் பாதைகளும் வாய்க்கால்களும், மதவுகளும் அற்ற அக்காலத்தில் மாரியிலே வெள்ளம் பெருக்கெடுக்கின்ற போது நகரத்தை நோக்கிப் பயணிப்பதற்கு பாதைகள் தடைப்பட்டுவிடும். புழுதி நிறைந்த பாதைகளும் குன்றும் குழியுமான போக்குவரத்தில் சிரமப்படுவோர் நாம். குண்டுவீச்சு விமானங்களும், வேவு விமானங்களும் வட்டமிட ஓலைக் கொட்டில்களிலும் மர நிழல்களிலுமே பள்ளிக்கூடங்களும் பரீட்சைகளும் இடம்பெற்றன. மாலை ஆனதும் ஒரே இருள்மயம். குப்பி விளக்குகளில் கண்ணைச் சிமிட்டிச் சிமிட்டிப் படிக்கும் காலம் அது.

கிளிநொச்சி நகரிலே இராணுவமுகாம் கரடிப்போக்கு சந்தியிலும் உள்ளே உள்ள கிராமங்களிலும் போராளிக் குழுக்களுக்கும் என பெரும்போர் நிறைந்த இந்தக் காலப்பகுதியில் க.பொ.த. உ/த பிரிவில் கற்றுத்தேறுவோர் குறைவாகக் காணப்படுகின்ற அக்காலத்தில் கற்றுத்தேறி 16.03.1990இல் றணசிங்க பிரேமதாச ஜனாதிபதியாக இருந்த காலத்தில் பயிலுநர் ஆசிரியராகத் தெரிவு செய்யப்பட்டு கிளி/ கிளிநொச்சி இந்து மகா வித்தியாலயத்தில் கடமையேற்றுப் பணிபுரிந்தவர்.

2015ஆம் ஆண்டு முதல் கிளி/ கிளிநொச்சி இந்து ஆரம்ப வித்தியாலயத்தில் பணிப்பொறுப்பை ஏற்று பாலன் கணேசமூர்த்தி அதிபரின் கீழ் பணிபுரிந்தவர். 33 வருட ஆசிரிய சேவைக்காலத்திலே இரண்டு குழந்தைகளைப்பெற்று அம்மம்மாவாகி அன்பும் அறனும் கொண்ட வாழ்விலே இவரது செயற்பாடானது

**"என்கடன் பணி செய்து கிடப்பதே"**
என்பது மகுட எண்ணமாக இருந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீட்டிலே அன்புப்பிள்ளையாக, குடும்பத்திலே மனைவியாக, நல்லவளாக, பண்பானவளாக, முக மலர்ச்சியால் சிறந்த நிர்வாகியாக விருந்தோம்பல் பண்புகளுடன் இல்லாளாக, பள்ளியிலே ஆசிரியராக எனப் பல வகிபாகங்களுடன் மரகத விழாக்காணும் சுரமஞ்சரி எதிர்காலம் அமைதியாகவும், இறைபக்தியுடன் உற்றார், உறவினர், அரவணைப்புடனும் திகழ வேண்டும் என வாழ்த்துகின்றேன்.

இரவு கண்டது கனவு என்பது விடிந்ததும் தெரியும். அதே போல் வாழ்ந்து முடிந்ததும் தெரியும் எவ்வாறு வாழ வேண்டும் என்பது. வாழ்க்கை அனுபவங்களை விட்டுச் செல்லாமல் அன்பை விட்டு செல்லும் மரகத விழா நாயகியின் நினைவுகள் இப் பள்ளியிலே தங்கியிருக்கும்.

நிலைமை மாறினால் மகிழ்ச்சியாக இருக்கலாம். என்பது பொய். மகிழ்ச்சியாக இருந்தாலே நிலைமை மாறிவிடும் என்பதே உண்மை. மகிழ்ச்சியாக எதிர்காலம் அமைய வாழ்த்தி நிற்கின்றேன்.

**திரு.சு.தர்மரத்தினம்**
**(J.P) அகில இலங்கை**
**கோட்டக்கல்விப் பணிப்பாளர்**
**கரைச்சி, கிளிநொச்சி.**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பணி ஓய்வு நிறைவைத் தரட்டும்....


சிவஞானம் சிறீதரன் பா.உ.
M.Ed.,B.A,PGDE(Me).,Sp.Tr.(Ag)
யாழ்ப்பாணத் தேர்தல் மாவட்டம்.
இல.882, ஆறுமுகம் வீதி.
வட்டக்கச்சி, கிளிநொச்சி, இலங்கை.
:-021 228 0024, 021 222 1595,
:-021 228 0024, 021 222 1595,
:-077 691 3244
:-shritharanmp@gmail.com
:-www.shritharan.com

පාර්ලිමේන්තුව
பாராளுமன்றம்
PARLIAMENT

SIVAGNANAM SHRITHARAN M.P
M.Ed.,B.A,PGDE(Me).,Sp.Tr.(Ag)
Jaffna Electoral District,
No.882, Arumugam Road,
Vaddakachchi, Kilinochchi, Sri Lanka.
:-021 228 0024, 021 222 1595,
:-021 228 0024, 021 222 1595,
:-077 691 3244
:-shritharanmp@gmail.com
:-www.shritharan.com


கிளிநொச்சி மண்ணில் பிறந்து, வளர்ந்து, தான் கல்விகற்ற பாடசாலையிலேயே ஆசிரியப் பணிக்கான முதல் நியமனமும் பெற்று, முப்பத்துமூன்று வருட கல்விப் பணியிலிருந்து இன்றையதினம் ஓய்வுபெறும் எனது பள்ளித்தோழி திருமதி.சுரமஞ்சரி பாலேந்திரராசா அவர்களின் பணிஓய்வு விழாமலருக்கு வாழ்த்துச்செய்தி வழங்கக் கிடைத்தமை மனநிறைவைத் தருகிறது.

நான் குருகுலத்தில் தங்கியிருந்து (மகாதேவா சுவாமிகள் சைவச்சிறுவர் இல்லம்) கிளி/கிளிநொச்சி இந்துக் கல்லூரியில் எனது பாடசாலைக் கல்வியைத் தொடர்ந்தபோது, என்னுடைய சகமாணவியாக அறிமுகமாகிய சுரமஞ்சரியின் பண்புகளும், அவரிடத்தே நிறைந்திருந்த மனிதாபிமானமும், ஆளுமைப் பாங்கும் இப்போதும் என் நினைவுகளில் ஊடாடுகிறது. ஆண், பெண் நட்புக் குறித்த சமூகப் புரிதல்கள் மிகக்குறைவாக இருந்த 1980 களின் நடுப்பகுதியில், எமது வகுப்பின் சகமாணவியான சுரமஞ்சரி, தனது வகுப்புத் தோழர்களது நிலையறிந்து உதவும் பக்குவப்பட்ட மனோநிலைக்குச் சொந்தக்காரியாக இருந்ததால், அவருக்கும் அனேக மாணவர்களுக்குமிடையே புரிதலும், மரியாதையும் நிறைந்த உறவும் மலர்ந்திருந்தது. கிட்டத்தட்ட 35 - 40 வருடங்கள் கடந்தும் அத்தகைய ஆத்மார்த்தமான உறவுநிலை இன்றளவும் எம்மிடையே தொடர்வது நிறைவைத் தருகிறது.

சுரமஞ்சரி என்றவுடன் என் நினைவில் முதலில் வருவதெல்லாம் அவரது பேச்சு வன்மையும், அதற்கான அவரது மொழிக் கையாளுகையும் தான். மாணவப் பருவத்தில் நாம் பங்கேற்கும் பேச்சுப் போட்டிகளின்போது பெரும்பாலும் பேச்சுகளை எழுதுவது, தயார்செய்வது என்பவற்றுக்கு ஆசிரியர்களையோ, அத்துறை சார்ந்தவர்களையோ எதிர்பார்த்திருப்பது வழமை. ஆனால் தனக்கான பேச்சுகளை மிகநேர்த்தியான மொழிநடையில் தானே தயார் செய்யும் இவர், சக போட்டியாளர் என்ற எந்தச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சலனமுமற்று எனது பேச்சுகளில் முறையான திருத்தங்களை உட்புகுத்தி அவற்றைச் சரியாக வடிவமைத்துத் தந்ததோடு, நான் உட்பட சக மாணவர்களின் வெற்றியில் மகிழும் பெருங்குணத்தையும் அப்போதிருந்தே தன்னகத்தே கொண்டிருந்தார் என்பதை அவரை அறிந்தவர்கள் நன்கறிவர்.

ஆளுமையும், நல்லெண்ணங்களும் நிரம்பப்பெற்ற ஒரு மனிதரால் மட்டுமே; தான் என்றும், தன் தனிப்பட்ட முன்னேற்றம் என்றும் சிந்தனை மட்டத்தைக் குறுக்கிக்கொள்ளாது, சகமனிதர்கள் சார்ந்தும், அவர்களது மனோநிலை சார்ந்தும், அவர்தம் முன்னேற்றம் சார்ந்தும் எண்ணத்தோன்றும் என்பது சமூகப் பொதுவிதி. அந்த அடிப்படையில் சுரமஞ்சரி, தனது நடத்தைப் பண்புகளால் மற்றவர்களினின்று தனித்துத் தெரியும் ஓர் ஆளுமைப் பெண்ணாகவே அப்போதும், இப்போதும் இருந்து வருகிறார். அத்தகைய ஒருவரை வகுப்புத் தோழியாகவும், அதே தோழமையுடனான இன்றைய குடும்ப நண்பியாகவும் பெற்றிருப்பது எனக்கும் மகிழ்வே.

நான் கிளி/கிளிநொச்சி மகாவித்தியாலயத்தின் அதிபராகக் கடமையாற்றிய காலத்தில், அதே பாடசாலையில் அவர் ஆரம்பக் கல்வி வகுதித் தலைவராகக் கடமையாற்றியபோது அவரது அர்ப்பணிப்புமிகு ஆசிரியப் பணியையும் ஆளுமைமிகு நிருவாகத் திறனையும் நான் கண்கூடாகக் கண்டிருக்கிறேன். மிகக்குறுகிய காலமே அவருடன் இணைந்து பணியாற்றியிருந்த போதும், மனிதவள மற்றும் பௌதீகவளப் பற்றாக்குறைகள் மிகுந்திருந்த அக்காலப் பகுதியில் பாடசாலைகளை நடாத்துவதில் எமக்கிருந்த இடர்பாடுகளை எதிர்கொள்வதில் அவரும் என்னோடு துணைநின்ற அந்தப் பொழுதுகளையும் இவ்விடத்தில் பதிவுசெய்ய விரும்புகிறேன்.

கிளிநொச்சி இந்துக் கல்லூரியின் மாணவியான அவர், தனது பாடசாலையிலேயே ஆசிரியப் பணிக்கான முதல் நியமனத்தையும் பெற்று, இன்று கிளி/ இந்து ஆரம்ப வித்தியாலயத்தின் ஆசிரியராகவே பணி ஓய்வு பெறுவதென்பது இந்துக்கல்லூரி அன்னையின் பெருமைமிகு தருணங்களில் ஒன்று என்றே நான் கருதுகிறேன். முப்பத்து மூன்று வருட ஆசிரியப் பணி என்பது அத்தனை சாதாரணமானதல்ல. அதிலும், மாணவர்களது வாழ்க்கைக்கு அத்திவாரம் இடும் ஆரம்பக்கல்வி ஆசிரியராக இந்த மாவட்டத்தின் இரண்டு தலைமுறையினரின் வளர்ச்சியில் அவருக்கிருக்கின்ற பங்கின் கனதி மிகக் காத்திரமானது என்றே நான் கருதுகிறேன்.

குழந்தைகளின் ஆசிரியராக மட்டுமன்றி அத்தனை குழந்தைகளுக்கும் அன்னையாகவும் மாறிப்போகும் அன்பின் பாற்பட்ட மனோநிலைக்குச் சொந்தக்காரியான ஆசிரியை திருமதி.சுரமஞ்சரி அவர்கள், தனது அயலவர்கள், நண்பர்கள், உறவினர்கள் என அத்தனை பேரினதும் அன்பிற்கும், மரியாதைக்கும் பாத்திரமான தனித்துவ அடையாளம் மிக்க ஆசிரியராகவே தன்னைத் தகவமைத்துக் கொண்டுள்ளார். அவரது தாயாரின் குணநலன்களையும், விருந்தோம்பலையும் நேரடியாகக் கண்ணுற்றவன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்ற வகையில், அவரது இந்தக் குணவியல்புகளின் பிரதிபலிப்பென்பது அவரது தாயாரிடமிருந்தே கடத்தப்பட்டிருக்கும் என நான் கருதுகிறேன். நேர்த்திமிகு அவரது வாழ்க்கைப் போக்குக்கு துணைசெய்யும் அவரது கணவரின் புரிதலையும், துணையிருப்பையும் இவ்விடத்தில் மனங்கொள்வதும் சாலப்பொருந்தும் என்பது என் எண்ணம்.

தனது பூர்வீக பூமியான கிளிநொச்சி மண்ணையும், அந்த மண்ணின் மாணவர்களையும் நேசித்து அவர்களைக் கல்விப் புலத்தில் உயர்ந்தவர்களாக வளர்த்தெடுக்க வேண்டுமென்ற வேணவாவில் தனது 33 வருட கல்விப் பணியையும் இந்த மாவட்டத்திற்கே அர்ப்பணித்து, ஒப்பாரும் மிக்காரும் இல்லாத ஆசிரியத்துவத்தின் அடையாளமாகவும், உயர் ஆளுமையாகவும் ஒவ்வொருவர் உள்ளங்களிலும் தன் பணியால் உயர்ந்து நிற்கும் ஆசிரியை திருமதி.சுரமஞ்சரி பாலேந்திரராசா அவர்களின் ஓய்வுக்காலம் ஒளிமயமாய் அமையவும், அவரது பணித் தடங்களைத் தாங்கி வெளிவரும் விழா மலர் சிறப்புறவும் நிறைவோடும், மகிழ்வோடும் வாழ்த்தி நிற்கிறேன்.

**நட்புக்கு வீற்றிருக்கை யாதெனின் கொட்பின்றி**
**ஒல்லும்வாய் ஊன்றும் நிலை' (குறள்.789)**

**இங்ஙனம்,**
**மக்கள் பணியிலுள்ள,**

**சிவஞானம் சிறீதரன்**
**பாராளுமன்ற உறுப்பினர்,**
**யாழ்ப்பாணத் தேர்தல் மாவட்டம்,**
**கிளிநொச்சி.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பணியிற் சிகரம் சுரமஞ்சரி....

திருமதி சுரமஞ்சரி பாலேந்திரராசா ஆசிரியை 1990.03.16 நியமனம் பெற்று கிளி/ கிளிநொச்சி இந்து மகா வித்தியாலயத்தில் கடமைப் பொறுப்பினையேற்றார். பின் புனித பற்றிமா றோ. க. வித்தியாலயத்தில் இவருடன் இரண்டு ஆண்டுகள் இணைந்து கடமையாற்றும் போது அவருடன் பழகும் சந்தர்ப்பம் ஓரிரு ஆண்டுகள் கிடைத்ததில் சந்தோசமடைந்தேன்.

மீண்டும் 2015ஆம் ஆண்டு கிளி/ கிளிநொச்சி இந்து ஆரம்ப வித்தியாலயத்தில் என்னுடன் சேவையில் இணைந்து கொண்டார்.

"பொம்மி ரீச்சர்" என்று ஊர் மக்களால் அழைக்கப்படும் சுரமஞ்சரி ஆசிரியை பல்திறன் ஆற்றலுடைய ஆளுமை மிக்கவர். "செய்யும் தொழிலே தெய்வம்" என்ற வரிகளுக்கேற்ப எந்தச் செயலையும் நேர்த்தியாகவும், சிறப்பாகவும் செயலாற்றக்கூடிய திறன் மிக்க ஓர் ஆசிரியை. கற்றல், கற்பித்தல் செயற்பாடுகளில் தனது வகுப்பு மாணவர்களுடனும், பெற்றோர்களுடனும் அன்பாகவும், பண்பாகவும் பழகும் ஆற்றல் உடையவர். இதற்குச் சான்றாக ஆசிரியையின் பிறந்த நாளில் பெற்றோர்கள், மாணவர்கள் ஒன்று கூடி வகுப்பறை அலங்காரம் செய்யப்பட்டு பிறந்த நாள் கேக் வெட்டி ஒவ்வொரு ஆண்டும் கொண்டாடி மகிழ்வார்கள். அத்துடன் இவ்வாசிரியரிடம் கற்ற மாணவர்களின் பெற்றோர்கள் பாடசாலைக்கு வந்து செல்லும் போது ஆசிரியரைத் தரிசித்துவிட்டே செல்வார்கள்.

நாடகத் துறையில் ஆற்றல் மிக்கவர். 1991ஆம் ஆண்டு கிளி/ புனித பற்றிமா பாடசாலையில் சேவையாற்றிய காலத்தில் தமிழ்த் தினப் போட்டிக்காக "காத்தவராயன் சிந்து நடைக் கூத்து" மாவட்ட மட்டப் போட்டியில் நடைபெற்றபோது கூத்து முடியும் வரை சபையோர் மெய் மறந்து பார்த்து ரசித்த காட்சியை நேரில் பார்த்து ரசித்தேன். இச் சிந்து நடைக் கூத்தை முறையாகப் பழக்கி பரிசினையும் பெற்ற பெருமை இவ்வாசிரியரையே சாரும்.

இவ் ஆசிரியை தனது கடைமைகளைச் சரியாகச் செய்வதில் வல்லவர். பாடசாலை ஆரம்பிப்பதற்கு முன்பே சமூகமளிப்பதை வழக்கமாகக் கொண்டவர். லீவு எடுப்பது என்பது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மிக மிக அருமை. சக ஆசிரியர்களுடன் சகசமாகப் பழகும் தன்மையுடையவர். நல்ல சிந்தனையுடன்ஆலோசனை வழங்கக் கூடியவர். இவர் கதைக்கும் போது கண்கள், கைகள் என்பன கதை பேசும். வகுப்பறைக்கேற்ற குரல். இக்குரலால் அனைவர்களினதும் கவனத்தையும் ஈர்க்கும் ஆற்றல் கொண்டவர். தனது கடமையில் எவ்வித தவறுகளும் இருக்கக் கூடாது என்பதில் எப்போதும் அக்கறையுடன் செயற்படுபவர். இதற்குச் சான்றாக ஒரு விடயத்தை மட்டும் கூறுகின்றேன். இந்த வருட ஆரம்பத்தில் ஓய்வு பெறுவதாக என்னிடத்தில் கூறினார். நான் அதிர்ச்சியானேன். "ஏன் ரீச்சர்" என்னும், "சில காலம் பணியாற்றலாம் தானே" என்றும் கூறிய போது " இல்லை சேர், என்னுடைய கடமையில் சிறிதளவேனும் தளர்வு நிலை இருப்பதை நான் விரும்பவில்லையென்றும்" "அந்த நிலை வருமுன்னே ஓய்வு பெற உள்ளதாகவும்" உறுதியாகச் சொன்னார். இது இவரின் கடமை உணர்விற்கு எடுத்துக்காட்டாகும். இவரின் செயற்பாடுகள், நற்பண்புகளை தொடர்ந்தே எழுதலாம். அத்துடன் இவ் ஆசிரியை தனது குடும்பத்துடன் ஓய்வுக்காலத்தை சிறப்பாகவும் சந்தோசமாகவும், உடல் உள ஆரோக்கியத்துடனும் வாழ வாழ்த்துகின்றேன்.

**திரு.பாலன் கணேசமூர்த்தி**
**அதிபர்**
**கிளி/ கிளிநொச்சி இந்து ஆரம்ப வித்தியாலயம்**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





# கிளி/ கிளிநொச்சி மகாவித்தியாலயம்
## ஆசிரியர் குழாம் - 2011



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மரகதவிழா நாயகியை வாழ்த்துகின்றேன்

16.03.1990 முதல் ஆசிரியர் சேவையினைத் தொடங்கி 33 வருடங்களாக ஆசிரியராகப் பணியாற்றி ஓய்வுபெறும் திருமதி சுரமஞ்சரி பாலேந்திரராசா அவர்களுடைய ஓய்வுக்காலம் சிறப்பாக அமைய வாழ்த்துகின்றேன்.

ஆசிரியர் சேவை என்பது மிகவும் அர்ப்பணிப்பான சேவை என்பதுடன் மாணவர்களைக் கல்வி, மற்றும் இணைபாடவிதானச் செயற்பாடுகளின் ஊடாக அவர்களின் ஆளுமை விருத்தி, நல்லொழுக்கம், விழுமியங்கள், போன்றவற்றை வளர்த்தெடுத்து சமூகத்தில் நற்பிரஜையாக வழங்குகின்ற பாரிய பொறுப்பாகும்.

அத்தகையதான ஒரு பாரிய பொறுப்பை வகித்து ஓய்வுபெறுகின்றீர்கள் என்பதை பெருமையுடன் தெரிவித்துக்கொள்வதில் மனமகிழ்வு அடைகின்றேன்.

**திருமதி. வாசுகி நடேசமூர்த்தி**
**கிராம அலுவலர்**
**ஜெயந்திநகர் KN/30**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பணி நிறைவு பாராட்டு விழா வாழ்த்து

ஜெயந்திநகர் கிராமத்தின் திருமகளாய் உதித்து ஆசிரியராய்ப் பணிதொடர்ந்து இன்று பணி நிறைவு பெறும் பாலேந்திரராசா சுரமஞ்சரி அவர்களுக்கு கிராமம் சார்ந்து கிராமிய அபிவிருத்திச் சங்கம் எழுதிய ஒரு சில வரிகள் எம் கண்ணோட்டத்தின் எழுத்துக்கள் வாயிலாக....

ஜெயந்திநகர் மண் பெற்றெடுத்த குலவிளக்கே! எளிமை, நேர்மை, உண்மை இவை வெறும் வார்த்தைகள் அன்று என்று நீர் வாழ்ந்து காட்டிய வாழ்க்கை நெறிகள்.

பணிகள் செய்ய நீங்கள் சளைத்ததுமில்லை; என்றும் களைத்ததுமில்லை. தெரியாத ஒன்றை அறிய முயல்வீர். தெரிந்த ஒன்றைப் பிறருக்குப் புரிய வைப்பீர். அதற்காக உம்மை அலங்கரித்தது ஆசிரியப்பணி. ஆசிரியப் பணியில் பல பாடசாலைகள் கண்டு மண் தழுவும் பற்றில் ஜெயந்திநகர் கிளி / இந்து ஆரம்ப வித்தியாலயத்தில் இறுதிச்சேவை செய்து ஆசுக்கள் பல களைந்து நன்மாணாக்கரை, நல்மாந்தரை மண்ணிற்குத் தந்த நல்லாசிரியர் நீங்கள். கிராமத்தின் குலவிளக்காய் அறத்திற்கும், அபிவிருத்திக்கும் மேம்பட அயராது உழைத்து கிராமம் தழைத்தோங்க நீர் பல வழிகளில் உதவி புரிந்ததை எம்மவர் என்றும் மறவர். பள்ளியில் பல பணி செய்து சிறப்பான திறமைகண்டு இன்று பணிநிறைவு செய்தாலும் உங்கள் கிராமத்தின் பணி என்றும் நிறைவுபெறாது.

**ஓயாத கடல் அலைக்கு ஓய்வு ஏது?**
**கையில் சிக்காத காற்றிற்கு ஓய்வு ஏது?**
**இரவு பகல் மாறுகின்ற இயற்கைக்கு ஓய்வு ஏது?**
**இவற்றிற்கு எல்லாம் ஓய்வு என்றால் எவ்வளவு ஆச்சரியமோ,**
**அதைவிட ஆச்சரியம் உமக்கு ஓய்வு என்பது.**

ஜெயந்திநகர் மண்ணுதித்த சுரமஞ்சரி ஆசானே! உங்களை கிராமம் மலர் கொண்டு வாழ்த்துகின்றது. இன்று உங்கள் பணிநிறைவில் என்றும் கிராமத்திற்காய் உழைப்பினையும், ஒத்துழைப்பினையும் எதிர்பார்த்து நிறைவுசெய்கிறோம்.

**கிராம அபிவிருத்திச் சங்கம்**
**ஜெயந்திநகர், கிளிநொச்சி**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org









Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வாழ்வாங்கு வாழ வாழ்த்துகிறேன்....

திருமதி. சுரமஞ்சரி பாலேந்திரராசா அவர்கள் தனது சேவையில் இருந்து ஓய்வுபெறும் நிலையில் அவரது சேவையைக் கௌரவித்து இம்மலருக்கு வாழ்த்துச்செய்தி வழங்குவதில் பெருமையடைகின்றேன். ஒப்படைத்த பொறுப்புக்களை செவ்வனே நிறைவேற்றுவதில் திருப்திகாண்பவர் இவர். தனது கடமையோடு தன்னை முற்றுமுழுதாக அர்ப்பணித்து மாணவர்களிடையேயும், பெற்றோர்கள் மத்தியிலும் சிறந்த மதிப்பைப் பெற்றவர். கிளிநொச்சி மகா வித்தியாலத்தில் நான் அதிபராகக் கடமையாற்றியபோது இவற்றை அவதானித்திருக்கிறேன்.

அவரதும் அவரது குடும்பத்தவரதும் வாழ்வு சிறக்க எல்லாம் வல்ல குமரபுரம் ஸ்ரீ முருகனைப் பிரார்த்திக்கின்றேன்.

**"தூயவை துணிந்தபோது பழிவந்து தொடர்வதில்லை"**

**வ.யோகநாதன்**
**ஓய்வுநிலை அதிபர்**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நண்பியுமாய், சக ஆசிரியையுமாய்....

சிறந்த தலைமைத்துவம் நிறைந்த ஆளுமைப் பண்பும் ஆற்றல்களும் கொண்ட சிறப்பான ஆசிரியை சுரமஞ்சரி அவர்கள். சுரமஞ்சரிக்கும் எனக்குமான தொடர்பு மிக நீண்டது. கிளிநொச்சி இந்துக் கல்லூரியில் மாணவர்களாகக் கல்விகற்ற காலத்தில் இருந்து இன்று வரைக்கும் அந்த உயரிய நட்பும், அன்பும் தொடர்ந்து கொண்டிருக்கிறது. ஒன்றாகப் படித்து ஒன்றாகக் கல்வி கற்பிப்பதற்கான மிகப்பெரிய வாய்ப்பு ஒன்று இருவருக்கும் வாய்த்ததில் வியப்பொன்றுமில்லை. சுரமஞ்சரி அவர்கள் 1990 இல் ஆசிரியர் நியமனம் பெற்று தனது ஆசிரியப் பணியை புனித பற்றிமா ரோமன் கத்தோலிக்க பாடசாலையில் ஆரம்பித்தார். அதனைத் தொடர்ந்து பல பாடசாலைகளில் கல்வி கற்பித்து கிளிநொச்சி மகா வித்தியாலயத்தில் அவர் கல்வி கற்பிக்க வந்த பொழுது அந்தப் பாடசாலையின் பிரதி அதிபராக நான் கடமையாற்றிக் கொண்டிருந்தேன். நீண்ட காலத்தின் பின்னர் முதல் குடியேற்ற காலத்தில் அந்தப் பாடசாலையின் அதிபராக நான் பொறுப்பேற்ற பொழுது சுரமஞ்சரி அவர்கள் ஆரம்பப் பிரிவினருடைய வகுதித் தலைவராக இருந்தார்.

கிளிநொச்சி மகா வித்தியாலயத்தில் நான் அதிபராகக் கடமையாற்றிய காலத்தில் சுரமஞ்சரி அவர்கள் ஆரம்பப் பிரிவின் வகுதித் தலைவராகக் கடமை ஆற்றினார். அந்தக் காலத்தில் 960 பிள்ளைகள் வரையில் அங்கு கல்வி கற்றார்கள். 28 வகுப்பறைகள் ஆரம்பப் பிரிவில் இருந்தன. இந்த ஆரம்பப் பிரிவை பரிபாலனம் செய்கின்ற பொறுப்பினை சுரமஞ்சரி இடம் வழங்கியிருந்தேன். பிள்ளைகளில் எந்த அளவுக்கு அன்பு காட்டுகிறாரோ அதேபோல ஆசிரியர்களோடும் அன்பாக இருந்து அத்தனை பிள்ளைகளுக்கும் தேவையான விடயங்களை நேர்த்தியாக வழங்குகின்ற ஆற்றல் பொருந்தியவராக சுரமஞ்சரி அவர்கள் காணப்பட்டார்.

ஆசிரியர்களிடத்தே உருவாகின்ற தேவைகளை நாசூக்காக என்னிடம் தெரிவித்து அதற்கான தீர்வுகளைப் பெற்றுக் கொள்வதில் அவருக்கு ஈடாக அவரே காணப்பட்டார். யாருக்கும் இடையில் பிரச்சினைகளை ஏற்படுத்தாது பிரச்சினைகளை பிரச்சினைகளாகக் கருதாது மிக இலகுவாகப் பிரச்சினைகளைப் பேசித் தீர்க்கும் ஆற்றல் பொருந்தியவராக அவர் காணப்பட்டார். இதனால் மிக அதிக அளவில் குழந்தைகள் இருந்தாலும் மிக அதிக அளவில் ஆசிரியர்கள் இருந்தாலும் பிரச்சினைகள் மிகக் குறைவாகவே இருந்தன. இதனால் 2800 வரையில் கல்வி கற்ற அந்த பாடசாலையில் மிக நேர்த்தியாக பாடசாலை நிர்வாகத்தை நடாத்துவதற்கு பெரிதும் ஒத்துழைத்தவராக சுரமஞ்சரி அவர்கள் இருந்தார். இன்றைய காலத்தில் பாடசாலையில் அதிபர் தரம் பெற்ற பல அதிபர்கள் பிரதி அதிபர்களாகக் கடமை ஆற்றுகின்றனர். அந்தக் காலத்தில் யாருமே அதிபர் தரம் பெறாத ஆசிரியர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தரத்தைக் கொண்ட பிரதி அதிபர்கள், உப அதிபர்களுடன் மிகச் சிறப்பாக பாடசாலையை நடத்துவதற்கு சுரமஞ்சரி போன்ற பலருடைய ஆதரவு எமக்கு இருந்தது என்பதை இந்த இடத்தில் மகிழ்ச்சியாகக் கூறலாம். அந்த வகையில் தற்பொழுது சுரமஞ்சரி அவர்கள் தான் ஆரம்பக் கல்வி முதல் உயர் கல்வி வரை கல்வி கற்ற இந்து கல்லூரியின் ஆரம்ப பிரிவின் ஆசிரியராக பணியாற்றி ஓய்வு பெறுவது என்பது மிகவும் நிறைவினைத் தருகின்ற ஒரு விடயமாகும். அவர் தன்னுடைய சுய தேவை கருதி ஓய்வு பெறுகின்ற காலத்துக்கு 5 ஆண்டுகள் முன்பாக ஓய்வு பெறுகிறார். இது ஒரு வகையில் இந்த சமூகத்தில் இருக்கின்ற பிள்ளைகளுக்கு கிடைக்க வேண்டிய பல்வேறு விடயங்கள் கிடைக்காமல் போகின்றது என்ற ஒரு மன நெருடலைத் தருகின்றது. இருப்பினும் அவர் தன்னுடைய சுய தேவையின் பொருட்டு ஓய்வெடுத்து வீட்டுக்கு செல்வது என்பது ஏற்றுக்கொள்ள வேண்டிய ஒன்றாக இருக்கிறது.

அந்த வகையில் போய் வருகின்ற சுரமஞ்சரி அவர்களுடைய எதிர்காலம் சீரோடும் சிறப்போடும் அமைய வேண்டும் என அவரை நான் வாழ்த்துகின்றேன். சுரமஞ்சரிக்கும் எங்களுக்குமான உறவு என்பது ஒரு நீண்ட நெடியது. காலத்தால் பிரிக்க முடியாதது. சுரமஞ்சரின் வெற்றியில் எந்த அளவுக்கு பாடசாலை இருக்கின்றதோ அந்த அளவுக்கு அவருடைய வீட்டுச் சூழலும் வாய்ப்பாக அமைந்திருக்கின்றது. சுரமஞ்சரியுடைய கணவர் அன்புக்குரிய சுதா அண்ணா அவர்கள் சுரமஞ்சரியுடைய சேவைகளுக்கு செய்கின்ற ஒத்தாசையும் வழங்குகின்ற ஆதரவும் சுரமஞ்சரியை ஒரு சிறந்த ஆசிரியராக எங்களுடைய சமூகத்திற்கு அடையாளம் காட்டி இருக்கிறது. நாளாந்தம் சுரமஞ்சரியின் பணிக்கு சுதா அண்ணா அவர்கள் ஏற்றிக்கொண்டு போய் விடுவதும் பின்னர் சென்று அவரை வீட்டுக்கு அழைத்து வருவதும் என்ற தொடர்ச்சியான பணியை நான் நினைக்கிறேன். அவருடைய முப்பத்துமூன்று ஆண்டுகால கல்விப் பணியில் நேர்த்தியாக அவர் ஆற்றி இருக்கிறார் என்பது அவருடைய வெற்றிக்கான மற்றொரு படியாகும். அந்த வகையிலே ஒவ்வொருவருடைய வெற்றியின் பின்னணியிலும் பலர் இருப்பது போல சுரமஞ்சரியின் வெற்றியின் பணியிலும் அவருடைய துணைவர் அவருடைய தாயார் போன்றோர் இருந்தனர்.

சுரமஞ்சரியுடைய குடும்பத்துக்கும் எங்களுடைய குடும்பத்துக்குமான உறவு என்பது காலத்தால் மறக்க முடியாதது. மிகக் கொடிய போர் நடைபெற்றுக் கொண்டிருந்த காலத்தில் இறுதிப் போரின் போது நாங்கள் எல்லோருமே வலைஞர்மடத்தில் ஒரு தென்னந்தோப்பு காணியில் ஒன்றாகக் குடியிருந்தோம். எங்களுடைய பதுங்குகுழியின் அருகில் அவர்களுடைய பதுங்குகுழியும் இருந்தது. நாங்கள் எல்லோரும் உயிருக்காகப் போராடி வாழ்ந்த அந்தக் காலத்திலே அருகருகாக இருந்து நாங்கள் உயிரைப் பாதுகாத்தது மறக்க முடியாத ஒரு அதிசயமாகும். நாங்கள் வாழ்ந்த அந்தச் சூழலில் பல தடவைகளில் எறிகணைகளும், துப்பாக்கி ரவைகளும் பலருடைய உயிரைக் காவு கொண்ட பொழுதும் இறைவனுடைய அருளாலும், தங்களுடைய புத்திசாலித்தனத்தாலும் நாங்கள் உயிர்தப்பிக் கொண்டது என்பது இன்றும் மெய்சிலிர்க்க வைக்கின்ற விடயமாகும். அந்த வகையிலே இறுதியாக நாங்கள் வலைஞர்மடத்திலிருந்து வெளியேறிய பொழுது நானும் சுரமஞ்சரியுடைய குடும்பத்தினரும் என்னுடைய உறவினர்களும் ஒன்றாக கப்பலில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏறி பருத்தித்துறை கடற்கரையில் தரையிறங்கி பின்னர் நாங்கள் இந்துக்கல்லூரியின் தற்காலிக முகாமில் தங்கி இருந்து அதன் பின்னர் இராமாவில் முகாம்களிலே வாழ்ந்த காலங்கள் இனிமையானவை. அந்தக் காலத்தில் இராமாவில் ராணுவ முகாமுக்குள் ஒரு பாடசாலையைச் சிறப்பாக நடத்தியமையை நான் இப்பொழுதும் நினைத்துப் பார்க்கின்றேன்.

அதனைத் தொடர்ந்து நாங்கள் ஒன்றாக வெளியேறி பருத்தித்துறை பகுதியிலே தங்கி இருந்த காலங்களையும் இந்தக் காலத்தில் நினைத்துப் பார்க்கிறேன். ஒரு கொடிய போரின் பின்னர் ஒரு வாழ்விழந்த மக்களாக நாங்கள் மீளக்குடியேறியபொழுது பாடசாலைகளைக் கட்டியமைக்க வேண்டிய பாரிய பணியிலே நாங்கள் எல்லோரும் ஒன்றாகச் சேர்ந்து பாடசாலைகளைக் கட்டி எழுப்பி பாடசாலையிலே கற்கின்ற மாணவர்களுக்கும் சமூகத்துக்கும் தன்னம்பிக்கை ஊட்டி மிகப்பெரிய ஒரு பாடசாலையாக அந்தக் காலத்தில் கிளிநொச்சி மகா வித்தியாலயத்தை வளர்த்தெடுத்ததில் ஒவ்வொருவருடைய பங்கையும் நான் இந்த இடத்திலே நினைத்துப் பார்க்கிறேன். உண்மையிலேயே சுரமஞ்சரி போன்ற ஆசிரியர்கள் எப்போதாவது தான் தோன்றுவார்கள். அவர்கள் இந்தச் சமூகத்தைச் சிருஷ்டிப்பவர்களாக எப்பொழுதும் இருந்திருக்கிறார்கள். ஒரு நல்ல தாயாக, நல்ல ஒரு உறவாக, நல்ல ஒரு வழிகாட்டியாக, நல்ல ஒரு நண்பராக, நல்ல ஒரு சக ஆசிரியராக, நல்ல ஒரு சமூகத் தலைவராக சுரமஞ்சரி அவர்கள் இருந்து பணியாற்றி இருக்கிறார் என்பது மறக்க முடியாத ஒரு உண்மை தான்.

நினைத்தது சரி என்றால் அதை எந்த இடத்திலும் சொல்வதற்குத் தயங்காத ஒரு பெண்மணியாக சுரமஞ்சரி இருந்திருக்கிறார். நல்ல ஒரு விடயத்துக்காக பலரின் மத்தியில் தனியாக எழுந்து நின்று குரல் கொடுக்கக்கூடிய வல்லமை பொருந்தியவராகவும், ஆற்றல் உள்ளவராகவும் பல இடங்களில் அவர் தன்னை நிரூபித்திருக்கிறார். அந்த வகையிலே அவருடைய ஆளுமையும், அவருடைய தன்னம்பிக்கையும், அவருடைய துணிவும் அவரை சிறந்த ஒரு ஆசிரியராக இந்த சமூகத்திலே அடையாளப்படுத்தி இருக்கிறது. சுரமஞ்சரி போன்ற ஆசிரியர்கள் இன்று எமது சமூகத்துக்கு தேவையானவர்களாக இருக்கிறார்கள். அந்த வகையில் எமது இளைய ஆசிரிய சந்ததி , இளைய ஆசிரியர் சமூகம் சுரமஞ்சரி போன்ற சிரேஷ்ட ஆசிரியர்களுடைய வழியைப் பின்பற்றி தங்களுக்கும் தடங்களைப் பதிக்க வேண்டும் என்று இந்த நாளிலே நான் அன்பாக கேட்டுக்கொள்கிறேன்.

**திரு.அ.பங்கயற்செல்வன்**
**அதிபர்**
**கிளி / வட்டக்கச்சி ஆரம்ப வித்தியாலயம்**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சுரமஞ்சரியும் ஆரம்பக்கல்வியும்

திருமதி. சுரமஞ்சரி பாலேந்திரராசா அவர்கள் 1990.03.16 இல் ஆரம்பக்கல்வியின் ஆசிரியராகப் புதுமுகம் எடுத்த நன்நாள். இவர்கள் அன்றுதொட்டு இன்றுவரை ஆரம்பக்கல்வி செயற்பாடுகளில் ஓயாத அலையாக சோர்வில்லாத ஒளிக்கீற்றாக திகழ்ந்து வருகின்றார். ஆளுமைத்திறன், வாண்மைத்திறன், பண்புத்திறன் முதலியவற்றின் ஊடாக தம் மாணவர்களை தம்வசப்படுத்தும் நல்லாசிரியர். கல்வியுடன் நல்லொழுக்கம், நற்பண்பு, விழுமியத்திறன், நன்னடத்தை ஊடாக நன் மாணாக்கர்களை வளர்த்திட்ட ஆசிரியப்பெருமாட்டி. முதுமை என்ற உணர்வு தம் சகபாடிகளிடம் மட்டுமல்லாமல் எந்த ஆசிரியர்களிடமும் இருக்கக்கூடாது என்ற ஆனந்தத் துடிப்புடன் கருமமாற்றும் குறித்த தொகை சில ஆசிரியர்களில் இவர் முதல்வர்.

கிளிநொச்சி மாவட்டத்தின் ஆரம்பக்கல்வித்துறைக்கு இவரின் பங்களிப்பு அளப்பரியது. 2000 ஆண்டுகளில் பாடசாலைத்தொகுதி கட்டமைப்பில் குறித்த ஒரு பாடசாலைத் தொகுதியில் தலைமை வளவாளராகத் திகழ்ந்து அவ் ஆசிரிய அணியைப் புடம் போட்ட சிறந்த வளவாளர் என்பது குறிப்பிடத்தக்கது. பலநூறு செயலமர்வுகளில் வளவாளராக மகிழ்ச்சிகரமாக இன்முகத்துடன் நல்லாசிரியர்களின் உருவாக்கத்திற்கு முன்னோடியாகத் திகழ்ந்த ஆசிரியப்பெருந்தகை என்பது மறுக்க முடியாதது.

அளவோடும், கருத்து நிறைவோடும் மாணவர்களையும் சக ஆசிரியர்களையும் தம்வசப்படுத்தும் ஆசிரியத்துவம் இவரிடமிருப்பது இவரின் வாண்மைக்கு ஒரு எடுத்துக்காட்டு. இவர் போல ஆசிரியர்கள் இன்று வாண்மைத்துவம், மகிழ்ச்சிகரமான கற்பித்தல் நுட்பங்கள், சந்தர்ப்பத்திகேற்ப கற்பித்தல் முறையியலை மாற்றும் திறன் இன்றும் இருக்கிறார்கள், மிகமிக அரிது.

ஆசிரியர்கள் உருவாக்கப்படுவதில்லை. தாமாகவே உருவாகுகின்றார்கள். கற்பித்தல் ஒரு கலை. பணங்கொடுத்தும் பெறுவதில்லை. காலத்தின் அனுபவ ஞானத்தால் வாண்மைப் பயிற்சிகள் மூலமாக தம்மைத்தாமே உருவாக்கிக் கொண்டவர் திருமதி. சுரமஞ்சரி பாலேந்திரராசா அவர்கள். என்னுடைய பாடசாலைத் தரிசிப்பின் பொழுது மிகவும் சிறந்த உத்திகளுடன் கற்பித்தல் முறையை வெளிப்படுத்துவார். தன்னுடைய சகபாடி தன்னை மேற்பார்வை செய்கின்றார் என்ற குறைமனமில்லாது தன்னுடைய




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கற்பித்தல் நுட்பத்தையும், கற்பித்தல் இயல் அளவையும் உயர்வாகப் புலப்படுத்தும் நல்லாசிரியர்.

தம்மால் எவ்வேளையிலும், எச்சூழலிலும், எந்த விடயத்தையும், எவ்வாறான மாணவர்கள் மத்தியிலும், தம்மால் சிறப்பாக பாடம் புகட்ட முடியும் என பல தடவைகள் வெளிப்படுத்திய நல்ல வல்லாசிரியர். இவர்களின் ஓய்வு ஆரம்பக்கல்விப் பரப்பில் பாரிய இடைவெளி. இவரைப் போல இன்றைய இளைய ஆசிரியர்கள் இவரை முன் உதாரணமாகக் கொண்டு புலப்பட வேண்டும் என்பது இன்றைய தேவையாகும்.

என்னுடைய நியமனகால மதிப்பு மிகு அன்பு நண்பி திருமதி. சுரமஞ்சரி அவர்கள் ஆரம்பக்கல்வியில் தன்னுடைய உச்ச இயலளவை வெளிப்படுத்தி நன் மாணாக்கர்களை உருவாக்கி நல் ஆசிரியர்களைப் புடம்போட்டு ஓய்வு பெறுகின்ற இவ்வேளை இவர் தன்னுடைய ஓய்வு காலத்தில் தன் அன்பான குடும்ப உறவுகளுடனும், சுக நலத்துடனும், மகிழ்ச்சிகரமாகப் பல்லாண்டு காலம் வாழ வேண்டும் எனவும் எல்லாம் வல்ல மீனாட்சி அம்மன் இறையருள் வேண்டி நட்புரிமையுடன் வாழ்த்துகின்றேன்.

**திரு.பொ.விஜயநாதன்**
**உதவிக்கல்விப்பணிப்பாளர்**
**வலயக்கல்வி அலுவலகம்**
**கிளிநொச்சி வடக்கு**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org









Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஆளுமை அரசி

பணிகளுள் சிறந்த பணியாம் எழுத்தறிவிக்கும் இறைபணியாற்றி ஓய்வுபெறும் திருமதி.சுரமஞ்சரி பாலேந்திரராசா அவர்களின் பணி ஓய்வுக்கான வாழ்த்தை வழங்குவதில் பெருமகிழ்வுறுகின்றேன். சிறார்களை அன்போடு அணைத்து அறிவொளி ஊட்டுவதில் அன்னையாய் நிகரற்ற சிறந்த நல்ல ஆசானாய், இவர் விளங்கினார். புத்தாக்க சிந்தனையும் இணைப்பாட செயற்பாடுகளின் ஒப்பற்றவராகவும், பல வழிகளில் மாணவரை வழிப்படுத்தும் ஆற்றல் கொண்டவர்.

அத்துடன் சக ஆசிரியர்களுடன் நல்ல நண்பியாக அவர்களின் தேவைக்கேற்ப உதவிடும் நல் உள்ளமும் தலைமையை மதிக்கும் நற்பண்பும் கொண்டவர். இவ்வாறு ஆசிரியத்துவத்தின் அடையாளமாகத் திகழ்ந்த சுரமஞ்சரி ஆசிரியர் நீண்ட ஆயுள் ஆரோக்கியத்துடன் மகிழ்வான வாழ்வு வாழ இறையாசி வேண்டி அமைகிறேன்.

திருமதி.தவரஜனி லோகநாதன்
ஆசிரிய ஆலோசகர்
(ஆரம்பக்கல்வி)
வலயக்கல்வி அலுவலகம்
கிளிநொச்சி தெற்கு





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மரகத விழாக்காணும் நங்கை நல்லாள் பணி நலன் பாராட்டி வாழ்த்தும் நாளிது

கனிவுடன் நற்பேச்சு
கருணை விழி வீச்சு
புனிதமாய்ச் சேவையாற்றி
புன்சிரிப்பு ஈய்ந்து
மனித நேயமாய்
மாணவரை நேசித்து
இனிதென அரும்பணியில்
முப்பத்துமூன்று ஆண்டுகாலம்
தனித்துவம் பேணிக்காத்த
பெருந்தகை இவரேயாவார்.

அன்பு, அரவணைப்பு, ஆற்றல், ஆளுமை,
இன்சொல், ஈகை, இனிய புன்சிரிப்பு,
வன்சொல் அறியாத வாண்மை விருத்தி,
என்றும் பரிவோடு ஏற்ற வகையில்
நன்றறிவு, திறன், மனப்பாங்கும்
இன்று வரை இயல்பாக இன்பமுடன்
நன்றாய் வழிநடாத்தி வாழ வழிகாட்டி
சென்ற இடம் யாவும் சிறப்புடனே
நின்று பணியாற்றி நிறைந்த மனதோடு
நன்றே பார் போற்ற வாழ்ந்த
நல்லாசிரியை நல்லாள் சுரமஞ்சரியை
எல்லோரும் வாழ்த்திப் பாராட்டல்
இயல்பன்றோ....!
கல்விக்கு வித்தகியாள் கலைவாணி போலவே
நல்வித்தை நாயகியாள்
நாடகம், நடனம், பேச்சு, நற்கலைகள்
அத்தனையும் தேடலுடன் ஊடகமும் தெரிந்தவராய்!
பாடலுடன் கவிதை, பரதமும் பண்பாடும்,
நாடலுடன் பிள்ளைகளை நன்நெறிப்படுத்தி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஊடலும் கூடலும் உள்ளன்பாய் மாணவரை
வாடலின்றி வசப்படுத்தி வாஞ்சையுடன் வளர்த்தவரே!
தேடலின்றிப் போனவரை தேவையறிந்து உதவி
ஓடமென உழைத்துக் கரை சேர்த்த ஓட்டியிவர்
ஒருபொழுதும் ஓயாது காத்தமகள்.
உருகி ஒளி கொடுத்த மெழுகுவர்த்தி
கருகிய தீக்குச்சி கண்டு கொள்ளார்.
பெருகிய பாச நேசப் பெருந்தகையாள்
வருவாய் தேடாது வளர்த்த வித்தகியே!
திருவாய் மலர்ந்து திருத்திய பெருமாது
ஒருநாளும் மனம் நோகப் பேசாதாள்
கருமமது கண்ணாக கடமைமிகு பெண்ணாக
பெருமை நிறைந்தவராய் பெரும் சேவையாற்றியவர்.

தருமப் பணியாக தரணியை வாழவைத்தார்
குரு தெய்வம் என்ற குலதெய்வமானவளே!
பேறு பலபெற்றுப் பெருவாழ்வு வாழ்ந்திடவும்,
நூறகவை தாண்டி வாழ்க வரமெனவும்,
கூறு பல்லாசிகளும் குறைவில்லா வாழ்த்துகளும்,
ஆறு ஆண்டு காண அடித்தளமிட்டவரை,
மாறாத பேரன்பில் மாசில்லா மனத்தாளை,
ஆறுதலாய், நலமாய், வளமாய், குதூகலமாய் வாழ்கவென
ஆறு திருமுகன் ஆனைமுகன்
ஆனசக்தி ஆயகலை வாணியுடன்
ஆசியருளாரோக்கியமும்
பெருகிய நலம்வாழ வாழ்த்தி
வணங்கிப் பாராட்டிப் போற்றுகிறோம்.

**கவிஞன்–கலா கணேசன்**
**உருத்திரபுரம், கிளிநொச்சி**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# அன்பின் முகம் சுரமஞ்சரி

1990 களின் முற்பகுதியில் அறிமுகமானவர்கள் சுரமஞ்சரி பாலேந்திரராசா குடும்பத்தினர். அப்பொழுது யாழ்ப்பாணத்திலிருந்தார்கள். கணவர் பாலேந்திரராசாவை நாங்கள் சுதா என்றே அழைப்போம். அந்த நாட்களிலேயே அச்சுக் கலையில் ஈடுபட்டுக்கொண்டிருந்தார். அது பொருளாதாரத் தடையினால் உச்ச நெருக்கடியை வடபகுதித் தமிழர்கள் சந்தித்துக் கொண்டிருந்த காலம். அந்தப் பொருளாதாரத் தடையினால் அச்சுப் பொருட்களுக்கும் பெருந் தட்டுப்பாடு நிலவியது. அதனால் மாற்றுத் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி, ஸ்கிறீன்ட் பிறின்டிங் சிலவற்றை அச்சிட்டுக் கொண்டிருந்தோம். அப்படித்தான் வெளிச்சம் இதழ் வெளிவருவதைப்பற்றிய விளம்பரத்தையும் முதல் வெளிச்சம் இதழ்களுக்கான அட்டைப் படத்தையும் உருவாக்கினோம். பாலேந்திரராசா இதில் முக்கியமான பங்களிப்பைச் செய்திருந்தார்.

பிறகு, யாழ்ப்பாண இடம்பெயர்வு நடந்தது. சில மாதங்கள் எங்களுக்கிடையில் தொடர்பு விட்டுப் போயிற்று. ஆனாலும் தேடிப்பிடித்து மீண்டும் அச்சுப் பணிகளைச் செய்து கொண்டிருந்தேன். இப்படியிருக்கும்போது நாங்கள் மறுபடியும் இடம்பெயர்ந்து புதுக்குடியிருப்புக்குச் சென்றோம். அது 1996 ஆம் ஆண்டு. அங்கேதான் சுரமஞ்சரி பாலேந்திராவின் குடும்பத்தினரும் இருந்தனர். ஆச்சரியம் என்னவென்றால், சுரமஞ்சரி கற்பித்த மு/விக்னேஸ்வரா வித்தியாலயத்திலேயே வசந்தியும் கற்பிக்கச் சென்றார். இது இன்னும் எங்கள் இரண்டு குடும்பத்தினருக்கும் இடையிலான நெருக்கத்தையும் உறவையும் வலுப்படுத்தியது.

சுரமஞ்சரி இனிய சகோதரியாக இருந்தார். அவரிடமிருந்து அன்பூறிய வார்த்தைகளைத் தவிர வேறொன்றையும் இத்தனை ஆண்டுகளிலும் நான் அறிந்ததில்லை. "அண்ணை" என்று அன்பாக அழைக்கும்போது அதில் பொதிந்திருக்கும் அன்பையும் மதிப்பையும் கண்டு எப்போதும் வியப்பேன். எழுத்தாளர் தாமரைச்செல்வியைப் போலவே சுரமஞ்சரியும் அன்பை அன்றி வேறொன்றையும் அறிந்ததில்லை என்றுதான் எண்ணுகிறேன். அப்படியான இனிய சுபாவ குணமுள்ளவர். இத்தகைய பண்புச் சிறப்புடையவர், ஆசிரியப் பணியாற்றும்போது அவரிடம் படிக்கின்ற மாணவர்கள் பெரும்பேறு பெற்றவர்களாகவே இருப்பர். இதையும் நான் அறிந்தும், அவதானித்தும் உள்ளேன். சுரமஞ்சரியின் திறன், ஆற்றல், ஆளுமை, பண்புச் சிறப்புப் பற்றியெல்லாம் வசந்தி வந்து அடிக்கடி சொல்வார். ஏனைய ஆசிரியர்களுடன் இணைந்து செயற்படுவது, மாணவர்களை ஊக்குவிப்பது, முன்னேற்றுவது, வழிப்படுத்துவது,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்களை மகிழ்விப்பது, தேவைப்படுவோருக்கு உதவுவது என எல்லாவற்றிலும் சுரமஞ்சரி முதன்மையாளராகவே இருந்திருக்கிறார். சக ஆசிரியராக இருந்து அவதானித்த அவதானங்கள் அவை.

புதுக்குடியிருப்பிலிருந்து நாங்கள் (எமது குடும்பங்கள்) இடம்பெயர்ந்து கிளிநொச்சிக்கு வந்தோம். அது 2004 ஆம் ஆண்டு. கிளிநொச்சி ம.வித்தியாலயத்திலும் சுரமஞ்சரியும் வசந்தியும் இணைந்தே கற்பித்தனர். எங்கள் வீடுகளும் ஒரு நடைத் தூரத்தில் அண்மையாகவே இருந்தன. எங்கள் பிள்ளைகளும் அவர்களின் பிள்ளைகளும் இணைந்தே வளர்ந்தனர். 2008 இல் இடம்பெயரும்போதும் அநேகமாக ஒன்றாகவே இடம்பெயர்ந்தோம் எனலாம். வலைஞர் மடத்திலும் கூட அண்மையாகவே இருந்தோம். அங்கிருந்து வெளியேறியபோதும் ஒன்றாகவே வெளியேறி, ஒன்றாகவே அகதி முகாமிலிருந்தோம். அந்த நாட்களில் நாங்கள் மேலும் நெருங்கி, ஐக்கியமாகிப் பழக முடிந்தது. சுரமஞ்சரிக்கு நிகராக பாலேந்திரராசாவும் பாலேந்திரராசாவுக்கு நிகராகச் சுரமஞ்சரியும் என அன்பாகவும் ஆதரவாகவும் இருந்தனர்.

அதற்குப் பிறகு மீள் குடியேற்றம் நடந்தது. மீண்டும் கிளிநொச்சிக்கு வந்தோம். கிளிநொச்சி மகா வித்தியாலயத்தில் தொடர்ந்தும் வசந்தியும் சுரமஞ்சரியும் படிப்பித்தனர். என்ன ஆச்சரியமென்றால், 2015 இல் அங்கிருந்து இருவருக்கும் ஒன்றாகவே இடமாற்றம் கிடைத்தது. புதிய பாடசாலையாக இருவருக்கும் கிளி/ இந்து ஆரம்ப வித்தியாலயத்துக்குச் சென்றனர். இப்பொழுது (2023 இல்) இருவரும் ஒன்றாகவே ஓய்வு பெறுகின்றனர்.

சுரமஞ்சரியின் கற்பித்தல் திறனும் மாணவரின் உயர்ச்சிக்காக பெற்றோருடன் அவர் கொண்டிருக்கும் உறவும் முன்மாதிரியானவை. அவர் மாணவர்களுடன் பழகும் வாஞ்சை, அந்த மாணவர்களின் மனதில் பதிந்து. அவர்கள் பெரியவர்களாக வளர்ந்த பிறகு மதிப்பாக உயர்ச்சியடைவதைக் கவனித்திருக்கிறேன். ஆசிரிய மாணவ உறவில் நிலவுகின்ற அன்பிழைகள்தான் எப்போதும் அந்த மாணவர்களின் மனதில் மதிப்பாக மிஞ்சிநிற்கின்றன. இதற்கு மாணவர்களைப் பற்றிய கரிசனையும் ஆசிரியப் பொறுப்புணர்வும் குறித்த ஆசிரியரிடத்திலே காணப்படுகின்ற பண்பியல்பும் முக்கியமான காரணமாக இருக்க வேண்டும். அது சுரமஞ்சரியிடம் நிறையவுண்டு.

அன்பான சகோதரியாகவும் மதிப்பிலுயர்ந்த ஆசிரியையாகவும் மனதில் நிற்கும் சுரமஞ்சரி ஏறக்குறைய 33 ஆண்டுகள் கல்விப் பணி ஆற்றியிருக்கிறார். அவருடைய வாழ்க்கையின் பெரும்பகுதி ஆசிரியப்பணியிலேயே கழிந்திருக்கிறது. ஆயிரக்கணக்கான மாணவர்களை உருவாக்கிய பெரும்பணி இது. இதனை நிறைவு செய்திருக்கும் இனிய சகோதரி சுரமஞ்சரிக்கு அன்பும் வாழ்த்தும்.

**திரு.சி. கருணாகரன்**
**எழுத்தாளர்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஆளுமை நிறைந்த இந்துவின் புதல்வி....

இயற்கை எழிலும் அறநெறி இல்லங்களும் சூழ்ந்திருக்கும் கிளிநொச்சி மாவட்டத்தின் புகழுக்குரிய இந்துக்கல்லூரியின் ஆளுமை நிறைந்த மாணவியாகத் தடம்பதித்த ஆசிரியர் திருமதி.பாலேந்திரராசா சுரமஞ்சரியின் மலருக்கு வாழ்த்துத் தெரிவிப்பதில் மட்டற்ற மகிழ்ச்சி அடைகின்றேன்.

ஆசிரியராக 1990களில் அறிமுகமான காலங்களில் நான் பார்த்து இரசித்த அழகி. இவர் மிகுந்த சுறுசுறுப்பும் , துடிப்பான செயற்பாடும், துல்லியமான கற்பித்தல் நுட்பங்களும் நிறைந்தவர். "அவை அஞ்சாமை" என்பது பெண்களுக்கு பெருமை சேர்ப்பது. அத்தகைய மொழியாற்றல் நிறைந்தவர்.தரம் ஒன்று முதல் க.பொ.த உயர்தரம் வரையில் கிளி / இந்துக்கல்லூரியில் கல்வி கற்றவர். விளையாட்டுத்துறையில் அதிக ஈடுபாடுடையவராய் கல்லூரியில் தடம்பதித்தவர். கல்லூரியின் சிரேஷ்ட மாணவ தலைவியாக இருந்து கல்லூரிச் செயற்பாடுகளுக்கு உறுதுணை புரிந்தவர்.

1990 இல் ஆரம்பக்கல்வியில் பயிலுநர் ஆசிரியராக நியமனம் பெற்று தான்கற்ற கல்லூரியில் ஆசிரியராக முதல் கடமையை ஏற்று தனது முப்பத்து மூன்று வருடக் கல்விச் சேவையினையும் அதே ஆரம்பப் பாடசாலையில் நிறைவுசெய்யும் பெரும்பேறைப் பெற்ற ஆசிரியராவார். சுரமஞ்சரி ஆசிரியர் சிறந்த நடன ஆற்றுகையுடையவர். கிராமிய நடனத்தில் இவரது அசைவுகள் ( ஆசிரியர் தின நிகழ்வுகளில்) இன்றும் என்மனதில் பசுமையாகவுள்ளது. உருத்திரபுரம் கொத்தணியாக இருந்த காலத்தில் வலைப்பந்தாட்டப் போட்டியில் என்னோடு இவரும் விளையாடிய அழகான வெற்றிகள் இன்றும் மறக்கமுடியாதது.

மிகச்சிறந்த ஆசிரியராக கற்பித்தலிலும் இணைபாட விதானச் செயற்பாடுகளிலும் முன்னின்று உழைத்த ஒரு ஆசிரியரை உருவாக்கிய பெருமை இந்துக்கல்லூரிக்கு உரியது என்ற வகையில் அக்கல்லூரியின் பழைய மாணவி ஆசிரியரான ஆசிரியரை "ஆளுமை நிறைந்த வித்தகியாக" வாழ்த்துவதில் பெருமை கொள்கின்றேன்.காலத்தின் தேவைகருதி ஓய்வுக்காலத்திற்கு முன்பே ஓய்வை நாடும் ஆசிரியருக்கு சிறப்பான வாழ்க்கைப் பயணம் தொடரவும், குடும்பத்தினருடன் மகிழ்ச்சியாக வாழ எனது நல் வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**திருமதி.மீ.இதயசிவதாஸ்**
**அதிபர்,**
**கிளி / கிளிநொச்சி இந்துக்கல்லூரி**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



















Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# எழில் நிறை தனம் மலி திருமகள் சுரமஞ்சரி

என் உள்ளத்தில் ஆழப்புதைந்த உந்தன் புகழ்த்தேனையும் பணியையும் ஆசையோடு வார்த்தைகளால் பகிரும் மனப்பதிவு இது.

என் அன்புக்குரிய ஆசிரியை சுரமஞ்சரி முப்பத்து மூன்று ஆண்டுகள் ஆசிரியப் பணிபுரிந்தவர். தனது 55 ஆவது வயதில் ஓய்வு பெறும் இவ்வேளையில் இவருடைய செயற்பாடுகள் பலர் மனதில் நீங்கா இடம் பிடித்திருப்பதை யாவரும் அறிவார்.

ஜெயந்திநகர்ப் பதியில் உள்ள இந்துக் கல்லூரியில் உயர் கல்வி கற்று ஆசிரியப் பணிக்கு தகைமை பெற்றவர். நல்ல குடிமக்களை ஆரோக்கியமான சமுதாயத்தை அன்றும் இன்றும் உருவாக்கியதில் தனிப்பெரும் பண்பு இவருக்கு உண்டு. "ஒழுக்கம் விழுப்பம் தரும்" என்பதைத் தாரக மந்திரமாகக் கொண்டு பணியாற்றியது மட்டுமன்றி சகலருடனும் சகோதர வாஞ்சையுடன் பழகும் அன்பே உருவானவர். கருணை கூர் முகம், இங்கிதமான உரையாடல், வேற்றுமையின்றிப் பழகும் உயர் பண்பு, இரகசியம் காக்கும் தனித்துவம், பிறர் மனம் கோணாது நடக்கும் புரிந்துணர்வு, அனைவரையும் அன்பால் அரவணைத்து பிரச்சினைகள் வராது செம்மையுடன் வாழ்வை நல்வழிப்படுத்தும் பெண்ணரசி, தீர்க்க தரிசி . யார் எதைச் சொன்னாலும்

**"எப்பொருள் யார் யார் வாய்க் கேட்பினும்**
**அப்பொருள் மெய்ப்பொருள் காண்பதறிவு"**

என்ற வள்ளுவர் வாக்கை சிரமேற்கொண்டு வாழ்பவர்.

செந்தாமரையில் வீற்றிருக்கும் இலக்குமியாக பள்ளியில் வலம் வருவார். சிறந்த பேச்சாளர், வன்சொற்களைக் கையாளவே மாட்டார். எந்த வகுப்பைக் கொடுத்தாலும் புன்னகையுடன் ஏற்று திறம்பட நடத்துவதில் சமர்த்தர். மாணவர்களுடனும், அம் மாணவர்களின் பெற்றோர்களுடனும் நகமும் சதையும் போல் உறவாடும் தன்மையுடையவர். மாணவர்களின் ஒவ்வொரு செயற்பாட்டையும் அவதானித்து பெற்றோருடன் கலந்துரையாடி அவர்கள் வாழ்வுக்கு வழிகாட்டியாக இருப்பவர். பெற்றோர் மனதில் நீங்கா இடம் பிடித்த முதல் ஆசிரியை. இதனால் தான் ஆசிரியரை "அமுதம் நிறைந்த பால் கலசமாகப் பார்க்கின்றனர்."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆசிரியரின் அன்புமழையில் நனையும் மாணவச் செல்வங்கள் மனதில் மீனாட்சி அம்மனின் அருள் பாலிக்கும் திரு உருவாகவே இருக்கிறார். தீர்க்க முடியாத பிரச்சினைகளையும் சிந்தித்துச் செயற்பட்டு சரியானதைத் தட்டிக்கேட்டு தைரியமாக அதனை அணுகும் விவேகி. முதுகுக்குப் பின்னால் தூற்றுவோர் மத்தியில் சுரமஞ்சரி ஆசிரியர் நேருக்கு நேர் துணிவுடன் விவாதிக்கும் தராசு. மாணவர்களை வித்தகர்களாக உத்தமர்களாக உயர்ந்த இன்பம் காணும் தாயன்பு மிக்கவர். உயிரோடு உணர்வோடு என்போன்ற ஆசிரியர்களுடன் உறவாடும் அன்பு மிக்க சகோதரி. மனையறம் காத்து பள்ளியையும் கலைக் கோவிலாக நினைத்து வாழ விரும்பும் பண்புடையாளர். தலைமைக்கும் சக ஆசிரியர்களுக்கும் மதிப்பளித்து பல்கலைக் கழகமாக வாழ்ந்து வரும் வழிகாட்டி. ஜெயந்திநகருக்கு மட்டுமல்ல கிளிநொச்சி கனிஷ்ட வித்தியாலயத்திலும் பேரும் புகழும் பெற கடுமையாக உழைத்து வந்தவர்.

சுரமஞ்சரி ஆசிரியருக்குப் பக்கபலமாக அவரது வாழ்க்கைத் துணைவரும், மகளும், மகனும் கைகோர்த்து பல அறச் செயல்கள் செய்து பலரின் வாழ்க்கைக்கு கலங்கரை விளக்காக இருக்கின்றார்கள்.

ஓய்வு காலத்தில் ஆசிரியை வாழ்க்கைத் துணைவர் பாலேந்திரராசா அவர் தம் பிள்ளைகளுடன் மகிழ்ச்சியாக வாழ வேண்டும் என்று மனதார வாழ்த்துகின்றேன்.

ஆசிரியை
**திருமதி. யமுனா பரப்பிரகாசம்**
**பிரதி அதிபர்,**
**கிளி / கிளிநொச்சி இந்து ஆரம்ப வித்தியாலயம்**
**(உபசெயலாளர் – ஜெயந்திநகர் ஸ்ரீ மீனாட்சி கலை நர்த்தனாலயம்)**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org









Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மரகத விழா வாழ்த்துக்கள்....

திருமதி.சுரமஞ்சரி பாலேந்திரராசா எமது பாடசாலையில் ஆசிரியையாக கடமையாற்றிய காலத்தில் ஆரம்பக் கல்வி மாணவர்களை அரவணைத்து

**"அகனமர்ந்து ஈதலின் நன்றே முகனமர்ந்து**
**இன்சொலன் ஆகப்பெறின்"**

என்ற வள்ளுவர் வாக்கிற்கமைய முகம்மலர்ந்து, இனிய சொற்களைப் பேசி, மழலைக் குழந்தைகளைத் தலாட்டி , சீராட்டி, பாராட்டி வளர்த்த இவ் ஆசிரியை இப் பாடசாலையில் தன் சேவையை 2004 தொடக்கம் 2012 வரை ஆசிரியையாகவும் பின் 2012 தொடக்கம் 2015 வரை ஆரம்பக் கல்வி வகுதித் தலைவராகவும் கடமையாற்றியவர். தன்னுடைய சேவைக்காலத்தில்

**"சமன் செய்து சீர் தூக்கும் கோல் போல் அமைந்தொரு பால்**
**கோடாமை சான்றோர்க்கு அணி"**

என்ற வாக்கிற்கமைய சரியாக எடை காட்டும் தராசு போல் எப்பக்கமும் சாராமல் நடுநிலைமையைத் தாங்கி ஆசிரியர்களையும், மாணவர்களையும் வழிப்படுத்தியவர். குழந்தைகளோடு பழகிய காரணத்தினால் அவர் இன்றும் குழந்தை போலவே காணப்படுகின்றார். இவர் வாழ்க்கையை நோக்குமிடத்து அன்பான துணைவர் தேவையான உதவிகள் செய்து மனைவியின் தொழிலுக்கு உதவி புரிந்து, அழகுக்கு ஒரு மகளையும், ஆசைக்கொரு மகனையும், பெற்றெடுத்து கற்பித்து தங்களது கனிந்த மனம் போன்று பிள்ளைகளும் உயர்ந்துள்ளனர். இவ்வாறே இவருடைய சேவைகளில் பல்துறை ஆற்றல் பெற்று 55ஆவது வயதில் ஓய்வு என்ற சொல்லிலிருந்தாலும் ஓயாமல் உழைத்து நோய் நொடியின்றி மகிழ்வாக வாழ வாழ்த்துகின்றேன்.

அன்புடன்
**திருமதி. ஜெயந்தி தனபாலசிங்கம்**
**அதிபர்,**
**கிளி/ கிளிநொச்சி மகாவித்தியாலயம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சுரமஞ்சரி ரீச்சர்

சுந்தரம் தவழ் முகம்
சுறுசுறுப்பு நிறை அகம்
அன்பு சூழ் மனம்
அழகு நிறை குணம்

பேசுவதில் புனிதம்
கல்வி போதிப்பதில் கவனம்
சீராய் எம்மை வழிநடத்திய சிகரம்
சிறப்பான கருத்துக்களின் உபசாரம்

சிந்தும் தேனாய் இனிப்பவர்
இந்துவில் எமக்காய் உழைத்தவர்
பண்பும் கலந்து பயிற்றுவித்தவர்
பக்குவமாய் எம்மை உயர வைத்தவர்

ஓய்விலும் உயர வாழ்த்துகின்றேன்
உளமார உணர்வுகளால் வாழ்த்துகின்றேன்
வாழ்விலும் வளம்பெற வாழ்த்துகின்றேன்
வணங்கி ஆசி வேண்டி வாழ்த்துகின்றேன்.

**திருமதி.நகுலாதேவி பிறேமதாஸ**
**அபிவிருத்தி உத்தியோகத்தர்**
**ஜெயந்திநகர்,கிளிநொச்சி**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# என் மனம் கவர் ஆசிரிய உறவு

ஒவ்வொருவரின் வாழ்விலும் சில பக்கங்கள் மறக்கப்பட முடியாதவை. அதுபோல சில உறவுகளும் மறக்கப்படுவதில்லை. அது போலவே கிளிநொச்சி மகாவித்தியாலயத்திலும் எனக்குக்கிடைத்த உறவுகளும் வரமே. அவர்களில் குறிப்பிடத்தக்க நண்பராகவும் சக ஆசிரியராகவும் திகழ்பவர் திருமதி.சுரமஞ்சரி பாலேந்திரராசா.

2004 காலப்பகுதியில் அறிமுகமான இவர் இன்றுவரை குடும்ப நண்பராக இருந்து வருகிறார். 2009 இடப்பெயர்வின் பின்னரான காலப்பகுதியிலும் (2011) வரை கிளிநொச்சி மகா வித்தியாலயத்தில் ஒன்றாகக் கற்பித்த பின் எனது இடமாற்றத்தின் பின்னர் வெவ்வேறு பாடசாலைகளில் கற்பித்தாலும் எமக்கிடையிலான உறவு தொடர்ந்த வண்ணமே உள்ளது.

சுரமஞ்சரி ஆரம்பக்கல்வியை மாணவர்களுக்கு திறம்பட கற்பிப்பதில் மிகவும் புலமைவாய்ந்தவர். மாணவர்களின் உளவியலைப் புரிந்து தனது கற்பித்தலை மேற்கொள்ளக்கூடிய ஒருவர் என்பது குறிப்பிடத்தக்கது. சக ஆசிரியர்களுடன் சகோதரத்துவதுடனும், சிரித்த முகத்துடனும் பழகக்கூடிய இனிமையானவர்.

பாடசாலையில் ஆசிரியராக, வகுதித்தலைவராக தான் ஏற்றுக்கொண்ட பாத்திரத்திற்கு அமைவாக அனைத்துப் பணிகளையும் முழுமனதுடன் செயலாற்றும் திறமை கொண்டவர். இணைந்து பணியாற்றும் சந்தர்ப்பங்களில் இவர் தான் எடுத்துக்கொண்ட பொறுப்பை நிறைவேற்றும் வரை முழுமூச்சுடன் செயற்படுவதைக்கண்டு நான் அதிகம் பிரமித்துப்போயுள்ளேன்.

இவரைப் போலவே இவரின் கணவர் மற்றும் குழந்தைகளும் இன்முகத்துடன் அனைவருடனும் சகஜமாகப் பழகும் தன்மையுடையவர்கள். இவரின் ஓய்வுக்காலம் தனது குடும்பத்தவர்களுடன் இனிதாக அமைய வேண்டும் என வாழ்த்துகிறேன்.

**திருமதி.ஆறுமுகம் அனித்தா**
**ஓய்வுநிலை ஆசிரியர்**
**கிளிநொச்சி**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கருத்தில் நிறைந்த சுரமஞ்சரிக்கு
# விருத்தத்தில் தந்தேன் என் வாழ்த்து

நெஞ்சினை நிறைத்து நெருங்கிடும் தோழி
நீடுறு புகழில் நிலைத்துநீ வாழி
மஞ்சரி உன்றன் மனத்தெழில் வாழி
மங்கலம் பொங்கி மகிழ்வுடன் வாழி
அஞ்லென் றருகே அணைத்திட வாழி
ஆர்வமாய் உழைப்பை அளித்திட வாழி
பிஞ்சுகள் காத்த பெருமையள் வாழி
பேதைமை இல்லாப் பெருங்குணம் வாழி!

என்பினை ஈயும் எனதருந் தோழி
என்றுமே நலங்கள் இலங்கிட வாழி
அன்புடன் கல்வி அளித்தவள் வாழி
அருந்தவச் சுரத்தால் அணைத்திட வாழி
தன்னலம் மறக்கும் தகைமையள் வாழி
தாயெனக் கருணை தருபவள் வாழி
பன்முகத் திறமை படைத்தவள் வாழி
பாரினில் நன்மைகள் பகிர்ந்திட வாழி

கற்பிதத் திண்மை கனிந்தவென் தோழி
காவியப் பெண்ணே கலையென வாழி
அற்புதச் சாதனை படைத்துநீ வாழி
ஆற்றலில் வல்ல அமைதியள் வாழி
நற்பலன் பெற்றோர் நவின்றிட வாழி
நாநிலம் போற்ற நலமுற வாழி
உற்றவன் உள்நின் றுதவிட வாழி
ஊரவர் வாழ்த்தி உதவிட வாழி!

நல்லுளம் நயக்கும் நமதருந் தோழி
நாயக னுடனே நலங்கொள வாழி
இல்லற வாழ்வும் இனித்திட வாழி
ஈங்கிணை யில்லா இனிமையள் வாழி
அல்வழி ஏற்கா அகத்தினள் வாழி
ஆதவன் போலுன் அரும்புகழ் வாழி
வல்லபை நாயகன் வரத்தினால் வாழி
வாழிய ஆன்றோர் வாழ்த்திட வாழி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உறவாய் உயிராய் உளத்தில் நிறைந்தார்
அறத்தின் அடித்தள ஆசான் - திறனால்
சிறப்புடை ஆளுமை சிந்திடும் வல்லாள்
பிறந்த திம்மண்ணின் பீடு!

பீடுடை வாழ்வும் பிறந்தநன் மக்களும்
ஏடுடைத் தாயாள் இலங்கிய - நாடுறை
ஆளுடை அம்மை அழகென மீட்டிட
நீளுநிம்மதி நெஞ்சில் நிறைவு!

நிறைவுறு சேவை நிகழ்த்தினை ஈங்கு
கறையிலாச் செம்மை கருத்தில் - இறையாய்
மறையெனப் போதித்த மாசிலா நூலும்
அறையில் அதிரும் அறம்!

அரமெனும் கூர்மதி அன்பால் நிறைத்து
வரங்கள் வழங்கிடும் வண்ணச்- சுரத்துள்
இரக்க குணத்தினால் ஈகையில் வல்லாள்
அவள் இன்றும் அன்றும்

உயிர்ப்பாய்ப் பணிகள் உவப்புடன் செய்வாள்
பயிற்சியில் கற்போன் பணிவாம் - கயிற்றில்
துயிலா நடத்தித் துலங்கிட வைத்தே
பயிரெனக் காப்பாள் பரிந்து!

பரிவுடன் கூடும் பறவையாம் மக்கள்
சிரிப்புடன் தேர்வை சிரமேல் - பெரிதாய்த்
தெரியா இயலுமை தேக்கி நடத்தும்
அரிதுயர் ஆசான் அறிவு!

என்னையும் கண்டு எழிமையைக் காட்டிடக்
கன்னல் மொழியாம் கவிதையின் - மின்னலை
மன்னும் அழகாய் மகிழ்ந்தெனைப் போற்றியே
இன்னும் எழுதென்றாள் ஈங்கு!

ஈங்கிவள் அன்னை இயற்றிய நல்லறம்
தாங்கிட மாணவர் தாயென - ஆங்கிவர்
வாங்கிய வாழ்வில் வரமாய்க் கணவரும்
பாங்குடன் வாழ்க பரந்து!

பரந்திட வாங்கே பழம்பெரும் நட்பும்
இரங்கிடும் உன்றன் இயல்பால் - வரமாய்ச்
சுரங்களில் மூழ்கிச் சுகமே அழகாய்க்
கரத்தில் எடுப்பாய் களித்து!

திருமதி செ.தெய்வேந்திரமூர்த்தி.
பரந்தன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# அது ஒரு பொற்காலம்....

பிறப்பிலேயே ஆசிரியராகப் பிறப்பது சிலருக்கு மட்டும் தான் அமையும். இது இந்த விழாநாயகிக்குப் பொருந்தும் உயர்தர வகுப்பு மாணவர்களுக்குக் கற்பிப்பதற்கு உயர்தரத்தை தரமாகக் கற்று முடித்த ஒரு மாணவனே பொதுமானதாக இருக்கலாம். ஆனால் ஒரு பாலர் வகுப்பு ஆசிரியைக்கு கல்வியறிவுடன் அன்பு, கருணை, பாசம், அரவணைப்புடன், உளவியல், குழந்தை உளவியல், கவர்ச்சி, கலையாற்றல், பேச்சாற்றல், பாதுகாப்புணர்வு, சக ஆசிரிய உறவு, பெற்றோர் தொடர்பு, குழுச்செயற்பாட்டுணர்வு போன்ற பல்வேறு அம்சங்களும், குணாம்சங்களும் அமைந்திருக்க வேண்டும்.

2004 ஆம் ஆண்டு கிளிநொச்சி ம.வியில் யோகர் சுவாமியால் நாட்டப்பட்ட பலாமர நிழலில் காலைப்பிரார்த்தனைக் கூட்டத்தில் திருமதி சுரமஞ்சரி பாலேந்திரராசாவை முதன்முதலில் காண்கின்றேன். வந்த முதல்நாளே நற்சிந்தனை இவருடைய பேச்சு மாரி காலத்தில் இரணைமடுக்குளம் வான் பாய்ந்தது போன்றிருக்கும். கவர்ச்சிகரமான நடையுடை பாவனை, மலர்ச்சியான முகம், வாஞ்சையான பேச்சு, நம்பகத்தன்மை உறவுகளைப் பேணுதல் போன்ற இவருடைய நல்லாசிரியப் பண்பை மேலும் மெருகூட்டின.

கிளிநொச்சி ம.வியில் ஆசிரியராகப் பகுதித் தலைவராக இவர் இருந்த காலங்களில் கல்விச் செயற்பாடு மிகச் சிறப்பானதாக இருந்ததென்றே நான் கருதுகின்றேன். இந்த இடத்தில் திரு.அ.பங்கையற்செல்வன் அதிபரையும் நினைவு கூராமல் இருப்பது நீதியும் அல்ல நியாயமும் அல்ல. சுரமஞ்சரி ஆசிரியை அனைவரையும் சமமாக நடாத்தும் ஒரு நடுநிலைவாதியாகவும் (Mediator) ஆகவும் சில இடங்களில் நடந்திருக்கின்றார். அதே வேளை அனைவரையும் ஒருங்கிணைக்கும் ஒருங்கிணைப்பாளர் (Coordinator) ஆகவும் செயற்படுபவர். தனது ஆரம்பப் பிரிவில் நல்ல முகாமைத்துவத்தையும் (Management) நிதிக்கையாளுகைகளையும் (Money Management) சிறப்பாக மேற்கொள்பவர். இவர் பாலர் வகுப்போடு மட்டுமன்றி மேல் வகுப்பு மாணவர்களின் தமிழ்த்தினப்போட்டி, ஆங்கிலப்போட்டி விளையாட்டுப் போட்டி நிகழ்வுகளிற்குப் பயிற்றுவிக்கும் போது நேரகாலம் பார்க்காமல் நின்று செயற்படுபவர். இவர் மாணவர்களுக்கு காத்தவராயன் கூத்து, சிந்துநடைக் கூத்து பயிற்றுவித்தமை இன்றும் என் கண்முன்னே நிற்கின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுரமஞ்சரி ஆசிரியையைச் சுற்றி எப்போதும் ஆசிரியர்குழாம் அல்லது பெற்றோர்கள் அல்லது மாணவர்கள் சூழ்ந்து நிற்கக் காணலாம். யார் யாருக்கெல்லாம் கஸ்டதுன்பம் யாருக்கு பண நெருக்கடி, யார் வீட்டில் இன்ப துன்பம் என்றெல்லாம் அறிந்து அதற்கு ஆவன செய்ய முன்னிப்பார்.

சுரமஞ்சரியின் இத்தனை சிறப்பிற்கும் அவர் துணைவர் கைகொடுத்திருக்கின்றார். பாடசாலை நிறைவுற்றதும் எத்தனை மணிநேரம் காவல் நின்றிருந்ததை பாடசாலை முன்றிலுள்ள மரங்கள் சாட்சி கூறும். விழா நாயகி கணவர், மகள், மகன் மருமகன், பேர்த்தி, சகோதரர்கள், உற்றார், உறவினர்கள் அனைவருடனும் மகிழ்ச்சியுடன் வாழ என்றும் வாழ்த்துகின்றேன். சுரமஞ்சரிக்கான இந்த வாழ்த்தினைப் பதிவு செய்வதையிட்டு மகிழ்ச்சியடைகின்றேன்.

அன்புடன்
சந்திரா திருநாவுக்கரசு
ஓய்வுநிலை ஆசிரியர்
வவுனியா





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மரகதவிழா நாயகியே வாழ்க....

நீர்வளமும் நிலவளமும் ஒருங்கே அமையப் பெற்ற கிளிநொச்சி மாநகரிலே அம்மனின் அருட்கடாட்சம் உள்ள மீனாட்சி அம்மன் ஆலயமும், அந்தோனியார் ஆலயமும், ஆச்சிரமமும், சைவச்சிறுவர் இல்லமும், இன்னும் பல அம்சங்கள் பொருந்திய அழகிய கிராமமான ஜெயந்திநகரிலே தன்னலமற்ற குடும்பத்தில் பிறந்து வளர்ந்து சைவமும், தமிழும் ஒருங்கே அமையப் பெற்ற கிளி/ இந்து மகாவித்தியாலயம் எனும் பெயருடன்' விளங்கிய புகழ்பூத்த பாடசாலையில் ஆரம்பக்கல்வி தொடக்கம் உயர்தரக் கல்வியைக் "கடசறக்கற்று" கல்விப் பயணம் தொடர்ந்த நாயகியே! மஞ்சரியே! சுரமே! வாழ்க!

ஆசிரியப் பணியில் 1990இல் என்னுடன் ஒன்றாகப் பயணித்த நண்பியே! அயல் வீட்டுத்தோழியே! உன் சேவை புனிதமானது, மகத்தானது. மாணவர்களின் நெஞ்சங்களில் ஆழமாக வேரூன்றி அழியாப் புகழ்பெற்று மாணவர்களின் உள்ளங்களைக் கொள்ளை கொள்ளும் வகையில் தன்பால் ஈர்த்த மாதரசியே! உங்கள் 33 வருட சேவையில் எத்தனையோ பள்ளிகளில் பல புள்ளிகளை உருவாக்கிய சேவகியே நலமுடன் வாழ்க.

புலமைப்பரிசில் பரீட்சையில் மாணவர்களின் வெற்றிக்கு அயராது உழைத்து வெற்றிக்கு வழிகாட்டிய வித்தகியே! ஆசிரியையே வாழ்க!

உமது நேர்கொண்ட பார்வையும், நிமிர்ந்த நடையும், தமிழ்மணம் தவழும், இன்சொல்லாடல், ரம்மியமான தோற்றம் அன்றும் இன்றும் ஒரே தோற்றப்பொலிவுடன் விளங்கும் ஆசானே!

**" நன்மையும் தீமையும் நாடி நலம் புரிந்த**
**தன்மையான் ஆளப்படும்.**

என்ற வள்ளுவரின் வரிவடிவங்களுக்கு செயல்வடிவம் கொடுத்தாற்போல் கிளி /இந்து ஆரம்ப வித்தியாலயத்தில் நிகழ்வுகளை ஒழுங்குபடுத்துவதிலிருந்து அதனை நடத்துவதிலிருந்து முன்மாதிரியாக செயற்பட்ட ஆசிரியப் பெருந்தகையே! உமது சேவைக்கு புகழாரம் சூட்டுவது போற்றுதற்குரியது. இவர் தனது ஓய்வுக்காலத்தில் நீண்ட ஆயுளுடனும் இல்லறத்தில் நல்லறமாகவும், குடும்பத்துடன் அகமகிழ்ந்து வாழ எல்லாம் வல்ல ஶ்ரீ மீனாட்சி அம்மன் அருள்பாலிக்கவேண்டும் என்று கூறி வாழ்த்துகின்றேன்.

திருமதி.அருட்சோதி மகேஸ்வரன்
ஆசிரியை
கிளி / இந்து ஆரம்ப வித்தியாலயம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org








Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஆற்றலின் வழிகாட்டி

அறிவொளி வீசிய ஆதவன் பிரகாசமாய் கிளி. ஜெயந்திநகரில் உதித்த சுரமஞ்சரியே! 1992ஆம் ஆண்டு பற்றிமா வித்தியாலயத்தில் உன் முகம் கண்டேன். அன்று முதல் இன்று வரை எம் உறவு ஆலமரம் போல் கிளைகள் பரப்பி விழுதுவிட்டு வளர்ந்து வருகிறது. உமது துடிப்பான செயலாற்றலிலும், மிடுக்கான நடையிலும், நியாயத்தைத் தட்டிக்கேட்கும் திறனையும் கொண்டு நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக கல்விப் பயணத்தைக் கச்சிதமாக மேற்கொண்டீர்! அன்று முதல் இன்று வரை அன்பான புன்னகையும். அரவணைப்பான பேச்சும் மாறவில்லை. தான்மட்டுமல்ல தன்னைச் சார்ந்தவர்களும் உயர்ந்த நிலையில் இருக்க வேண்டுமென்ற நல்ல மனப்பாங்கு கொண்டவர். எல்லோரினதும் இன்பதுன்பங்களிலும் கலந்து ஆறுதல் கூறுவதிலும் பின்வாங்கமாட்டார்.

பாடசாலையில் மாணவர்களை நல்வழிகாட்டுதலிலும், கல்வி வளர்ச்சிக்குத் தூண்டுவதிலும் ஆற்றலை விருத்தி செய்வதிலும், முழுமையான அர்ப்பணிப்போடு செயற்படுவார். எல்லோர் மனதையும் கொள்ளை கொள்ளும் வகையில் பேச்சாற்றல் மிகுந்தவர். விமர்சனத்தால் சூழப்பட்ட உலகில் அதனை சிறு புன்னகையால் புறந்தள்ளி எதிர்நீச்சல் போட்டு இன்பதுன்பங்களைச் சமாளித்து வெற்றிநடை போடும் மனம் கொண்டவர். இவ்வாறாக சகல திறமைகளையும் தன்னுள் புதைத்து மாணவர்களுக்கு வழிகாட்டுகின்ற ஆசான். கல்விப் பயணத்தை இடைநிறுத்தி ஓய்வு பெறுகிறார் என்பதை ஏற்றுக்கொள்ள முடியவில்லை. இவரைப் போன்ற பல ஆசான்களின் ஓய்வு சமூகத்தில் பெரும் வெற்றிடமாகவே காணப்படுகின்றது. அதனை நிரப்புவது என்பது காலங்கனிந்த ஒன்றாகவும் திகழ்கிறது.

கிளிநொச்சி மகா வித்தியாலயத்தில் கிட்டத்தட்ட பத்து வருடங்கள் ஒன்றாகக் கல்வி கற்பிற்கும் பயணத்தில் ஒன்றித்திருந்தோம். அந்த வருடங்களில் நாம் பெற்ற சாதனைகள் பற்பல. அந்தப் பொற்காலத்தை எண்ணிப்பார்க்குகையில் மீண்டும் அந்நாட்கள் வராதா என்று மனம் ஏக்கநிலை கொள்கிறது. நாம் மகிழ்வுடன் ஒன்றாகக் கைகோர்த்து அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள் என ஒட்டுமொத்த பாடசாலைச் சூழலும், சமூகமும் ஒன்றித்துக் கழித்திருந்த காலத்தை மறுக்கவோ மறக்கவோ முடியாது. எமது பாடசாலையில் நடைபெற்ற ஒவ்வொரு விழாக்களும் இனிமையான பல சுவாரஸ்யம் மிகு கதைகளைக் கூறும். அது எம் வாழ்வில் திரும்பி வராத நாட்களாகும். அவை இனிய நனவுகள் இனி கனவுகளாக மாறிவிடும். சுரம் ஆற்றிய அளப்பரிய சேவையைப் பாராட்டியும், ஓய்வுகாலத்தை குடும்பத்துடன் உடல் உள ஆரோக்கியத்தோடு வாழ என் குடும்பம் சார்பான எனது வாழ்த்துக்கள்.

**திருமதி.புவனா குமார்**
**ஓய்வுநிலை ஆசிரியர்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# முத்தமிழ் வித்தகி சுரமஞ்சரி வாழ்க!

இந்துவின் ஊற்றாக முகிழ்ந்தெழுந்து கிளி / இந்து ஆரம்பப் பள்ளியில் அங்கமாக சேவையில் ஓய்வு பெறும் திருமதி. சுரமஞ்சரி பாலேந்திரராசா ஆசிரியர் அவர்களைப் பாராட்டி வாழ்த்துவதில் மனநிறைவு கொள்கின்றேன். கிளிநொச்சி இந்துக்கல்லூரி இந்து மகாவித்தியாலயமாக விளங்கிய காலத்து பள்ளித் தோழர்களாக வலம் வந்து வளம் பெற்றவர்கள். வகுப்பறையில் கல்விப்புலமையும், அரங்கத்தில் முத்தமிழின் ஆழத்தையும், மாணவர் குழுமத்தில் தலைமைத்துவத்தின் சிகரத்தையும், வெளிப்படுத்திய பதிவாகிய தலைசிறந்த மாணவியாகத் திகழ்ந்தவர். சிலப்பதிகாரம் தந்த கண்ணகி இன்றுவரை சுரமஞ்சரி அவர்களே என் மனப்பதிவில் உள்ளார். அவ்வாறான பன்முக ஆளுமையின் வடிவமாக உருவெடுத்து இன்று ஆரம்பப் பிரிவின் கலங்கரை விளக்காக நிலைபெற்று ஆசிரியப் பணியில் ஓய்வு பெறுகின்றார். வாழ்க! என்றும் வளமுடன்.

கிளி/ புனித பற்றிமா அன்னையின் ஆசியுடன் தொடக்கப்பட்ட ஆசிரியப் பணி கிளிநொச்சியின் பிரபல்யமான பல்வேறு பள்ளிகளில் தனது நிறைவான ஆற்றல்கள், ஆளுமைகள் என்பவற்றை ஒழுங்கமைத்து சிறந்த தலைமைத்துவமும் நற்பண்புகளும் கொண்ட மாணவர் சமுதாயத்தை உருவாக்கியுள்ளார். ஊர்ப்பிள்ளைகளை ஊட்டி வளர்த்ததன் பயன் தன் பிள்ளைகள் வளர வாய்ப்பு பெற்றமை அவரது தன்னலமற்ற சேவையின் அடையாளம் ஆகும். அனைவரோடும் அன்பாகப் பழகுதல், கலகலப்பாகப் புன்னகைபுரிதல், எடுத்த காரியத்தை நிறைவேற்றும் பாங்கு, தன்னம்பிக்கையுடனும் தைரியத்துடனும் பிரச்சினைகளை எதிர்கொள்ளும் பக்குவம் போன்றவை ஆசிரியர் சுரமஞ்சரி அவர்களின் ஆளுமையின் உரிமமாகும். இவ்வாறு கல்வி உலாப்போந்து ஈற்றில் கிளி/ கிளிநொச்சி இந்து ஆரம்ப வித்தியாலயத்தில் கற்று கற்பித்து சேவையில் ஓய்வுபெறும் வாய்ப்புப் பெற்றுள்ளமை இமைப் பொழுதும் அவர் நெஞ்சில் நீங்காத நினைவு நிலை கொள்ளும் என்றே எண்ணத் தோன்றுகின்றது. ஆசிரியர் அவர்களின் ஒப்பில்லாப் பணி என்றும் நின்று நிலைத்து அவர் சாயலில் வாழும் என்பதில் எவ்வித ஐயமுமில்லை. இன்று அரச பணியில் ஓய்வு பெறும் ஆசிரியர் சுரமஞ்சரி அவர்கள் ஓய்வு காலத்தில் தேக ஆரோக்கியத்துடன் தனது குடும்ப உறவுகளுடன் மகிழ்வோடு நீடூழி வாழ அவருக்கு ஸ்ரீ மீனாட்சியம்மன் அருள் வேண்டிப் பிரார்த்திப்பதோடு ஆசிரியரின் நீண்ட கால சேவைக்கு நன்றிகளையும் தெரிவித்து மகிழ்வோடு வாழ்த்துகின்றேன்.

**திரு. த. கண்ணபிரான்**
**அதிபர்**
**கிளி/ புதுமுறிப்பு விக்னேஸ்வரா வித்தியாலயம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஆசிரிய நண்பி சுரமஞ்சரிக்கு....

கல்விப் பணியை 33 வருடங்கள் நிறைவாக ஆற்றி ஓய்வுபெறும் ஆசிரிய நண்பி சுரமஞ்சரிக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் மட்டற்ற மகிழ்ச்சியடைகின்றேன். 1990.03.16 இல் இருந்து என்னுடன் கல்விப் பணியை ஆரம்பித்தாலும் 2015ஆம் ஆண்டு தொடக்கம் 2020ஆம் ஆண்டு வரை இப்பாடசாலையில் ஒன்றாகவே கடமையாற்றினோம் என்பதால் அவரின் சேவைச் சிறப்புத் தொடர்பாக சில வரிகளைக் கூற முனைகின்றேன்.

**"பெருமைக்கும் ஏனைச் சிறுமைக்கும்**
**தத்தம் கருமமே கட்டளைக்கல்"**

என்ற பொய்யா மொழிக்கிணங்க வாழ்வும், வார்த்தையும் இரண்டறக் கலந்து தனது சேவையில் தன்னை முழுமையாக ஈடுபடுத்தியவர் ஆசிரியர் சுரமஞ்சரி அவர்கள்.

வகுப்பறைச் செயற்பாடுகள் என்றாலும் சரி ஏனைய பொது நிகழ்வுகளாக இருந்தாலும் சரி ஏனையோர்க்கு முன் மாதிரியாகவும், எடுத்த கருமத்தை முன்னின்று திறம்பட முடிப்பவராகவும், அனைத்து செயற்பாடுகளிலும் கைகொடுக்கும் மனப்பக்குவம் உடையவராகவும், ஏனையோரையும் அதன்பால் இணைக்கும் நல்லுள்ளம் கொண்டவராகவும் காணப்பட்டார்.

இவரைப் போலவே இவர் கற்பிக்கும் மாணவர்களுக்கும் ஒழுங்கு, பழக்க வழக்கம் ஏனையோரை மதிக்கும் பண்பு நேர்த்தி கொண்டவர்களாக வளர்க்கப்பட்டார்கள். மாணவர்களின் அடைவு மட்டத்திற்காக மட்டுமல்ல, பாதுகாப்பு, நல்ல பழக்கவழக்கங்களையும் கற்பிக்கும் கிளி / இந்து ஆரம்ப வித்தியாலயத்தின் மிகப்பெரும் பலம் இவர். காலைப் பிரார்த்தனை தொடக்கம் பாடசாலை நிறைவடையும் வரை இவரது கண்காணிப்பு அனைத்து மாணவர்கள் மீதும் அக்கறைகொண்டதாக இருக்கும். ஆரம்பக் கல்வி மாணவர்களுக்கான போட்டிகள் என அறிவிக்கப்படும் சந்தர்ப்பங்களில் தனது வகுப்பு மாணவர்களைத் தயார்ப்படுத்துவதுடன் ஏனைய ஆசிரியர்களையும் ஊக்கப்படுத்தி போட்டிகளில் வெற்றி பெற வைப்பதற்காக முழுமூச்சுடன் செயற்படுபவர்.

2018ஆம் ஆண்டு தரம் 05 மாணவர்களை புலமைப் பரிசில் பரீட்சைக்காக ஒப்படைத்த போது மனமுவந்து ஏற்று, தன்னை முழுமையாக அர்ப்பணித்து மாணவர்களை பரீட்சைக்காகத் தயார்படுத்தி பெருமளவான மாணவர்களைச் சித்தியடைய வைத்ததில் இவருக்கு பெரும் பங்குண்டு. சிரித்த முகம், இனிமையான பேச்சு, பண்பான நடத்தை , ஆறுதல் தரும் சொற்கள், அன்பான அரவணைப்பு இவரது அடையாளம். உங்கள் ஓய்வுகாலம் சிறக்க வேண்டும். நோய் நொடியற்ற வாழ்வை இறைவன் தர வேண்டுமென வேண்டுவதுடன் நீங்களும், உங்கள் குடும்ப உறவுகளும் உடல், உள ஆரோக்கியத்துடன் வளமுடன், மகிழ்வுடன் வாழ எல்லாம் வல்ல இறைவன் அருள் கிடைக்க வேண்டுகின்றேன்.

**திருமதி. வதனி சிம்மேந்திரன்**
**முன்னாள் பிரதி அதிபர்**
**கிளி/இந்து ஆரம்ப வித்தியாலயம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மனமகிழ்ந்து நல்லாசானை உளமார வாழ்த்துகின்றேன்....

கிளிநொச்சியில் ஜெயந்திநகர் என்னும் கிராமத்தில் வாழ்ந்து 1990ஆம் ஆண்டுமுதல் மூன்று தசாப்தங்களாக ஆசிரியப் பணியில் நல்லாசானாகப் பணிபுரிந்த வித்தகி.

இவரின் கல்விக் காலம் முதல் கற்பிக்கும் காலம்வரை இவருடன் பழகும் வாய்ப்பு எனக்குக் கிடைத்தது. அன்றுமுதல் இன்றுவரை எல்லோருடனும் அன்பாகவும், பண்பாகவும் பழகும் அன்புள்ளம் கொண்ட நல்லாசான்.

"கல்வியே கண்" எனும் இலட்சியத்தை மனதில் கொண்டு கல்விக்காலத்திலும் கற்பிக்கும் காலத்திலும் சிறப்பாக நடந்து கொண்டவர். ஒழுக்கமும், பண்பும், அர்ப்பணிப்பும் செய்திறனில் ஆற்றலும் கொண்ட நல்லதோர் ஆசான்.

அவரது ஆசிரியப் பணியில் ஆரம்பக் கல்வியில் சிறார்களை நல்வழிப்படுத்தும் ஆற்றல்கொண்ட நல்லாசானாக எல்லோரின் மனங்களையும் கவர்ந்துகொண்டவர். இவரிடம் கொடுக்கப்படுகின்ற எந்தப் பொறுப்புக்களையும் தன்வயமாக்கி ஆற்றல் கொண்டு செய்து முடிப்பவர். தெய்வ பக்தி கொண்டவராக இருந்து கடமையைக் கண்ணியமாக எதிலும் பொறுப்புள்ளவராக தனது பணியினைத் தொடர்வதைக் காணக்கூடியதாக இருந்தது.

இவருக்கு வாழ்த்துக் கூறுவதில் உளமகிழ்ந்து பெருமை கொள்கின்றேன். இவர் தனது ஓய்வுக்காலத்தில் தனது கணவர் பிள்ளைகளுடன் இணைந்து வாழவும், இளமையில் நான் கண்ட சுரமஞ்சரியாக வாழவும் வாழ்த்தி நிற்கின்றேன்.

அன்புடன்
திரு.மகேசன் உமாசங்கர்
ஓய்வுநிலை பிரதி அதிபர்
கிளி / கிளிநொச்சி இந்துக்கல்லூரி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சுரத்துடன் நான்....

என் அன்புச் சகோதரி திருமதி.சுரமஞ்சரி பாலேந்திரராசா ஆசிரியை அவர்களின் சேவை நலன் பாராட்டு விழாவிற்கு வாழ்த்துச் செய்தி அனுப்புவதில் பெருமகிழ்ச்சி அடைகின்றேன்.

எவ்வேளையிலும், சிரித்த முகத்துடன் அனைவரையும் அரவணைத்து அன்பு செலுத்துவதால் மாணவர்களை மட்டுமல்ல முழு ஆசிரியர்களையும் கவர்ந்த ஒரு ஆசான். இயல், இசை, நாடகம் என அனைத்திலும் மிகத்திறமையாகச் செயற்பட்டு பாடசாலையின் பல வெற்றிகளுக்கு ஆணிவேராக இருந்தவர். சாரணியத்திலும் தனக்கென ஒரு இடம் பிடித்தவர். நான் அவரை "சுரம்" என்றே அழைப்பேன். சுரம் என்னுடன் கடமையாற்றிய காலம் ஒரு பொற்காலம்தான். அவர் ஆரம்பக்கல்விப் பிரிவிற்கு கிடைத்த ஒரு வரம். பாடசாலைக்கு மட்டுமல்ல, எம் மாவட்டத்திற்கே கிடைத்த ஒரு பொக்கிஷம் தான். அவரது ஓய்வுக்காலம் மகிழ்வோடும்,நலமோடும் அமைய. இறைவனை வேண்டி உளமார வாழ்த்துகின்றேன் .

திருமதி . மகேஸ்வரி மாணிக்கவாசகர்
முன்னாள் ஆசிரியை
கிளி/புனித பற்றிமா றோ.க.த.க பாடசாலை
உருத்திரபுரம்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# என் இனிய தோழியே!

அன்புச் சோதரியே!!
முப்பத்து மூன்று ஆண்டுகளில்
இருபத்தொரு ஆண்டுகள் ஒன்றாகக் கற்பித்தோம்.
பாடசாலைக் காலமும்
ஆசிரிய வாழ்க்கையும்
எங்களை இணைத்தது.
இனிய நெடும்பயணத்தில்
இடப்பெயர்வுகள் வந்து போயின.
ஆனாலும் எங்கள் அன்போ இடம்பெயராது
ஓங்கியே வளர்ந்தது.
பாடசாலைகளில் மாற்றம் வந்தது
ஆனாலும் நாங்கள் பிரியாமல்
ஒன்றாகவே பயணித்தோம்.
எத்தனை இனிய பயணம் இது!
எவ்வளவு இனிய உறவு நமது!!



வகுப்புகளில் பாடும் குயிலாக
மாணவர்களிடத்தில் ஆடும் மயிலாக
ஆசிரியரிடத்திலே இனிய தோழியாக
பெற்றோரிடத்திலே நல்ல உறவாக
பாடசாலையிலே மறக்கமுடியாத அடையாளமாக
என்றுமிருந்த இனிய நண்பி,
நீவிர் உருவாக்கிய மாணவர்கள் உம்மைப் போற்றுகிறார்கள்.
உம்முடன் பழகிய உம் சக ஆசிரியர்கள்
உம்மை வாழ்த்துகிறார்கள்.
அவர்களோடு இணைந்து நானும் போற்றி வாழ்த்துகிறேன்.
என்றும் இனிமை பெற்று வாழ்க! வாழ்க!....

திருமதி. வசந்தி கருணாகரன்
ஆசிரியர்
கிளி / இந்து ஆரம்ப வித்தியாலயம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மரகதமணியாய் ஒளிர்க...!

சிகரம் தொட
அகரம் தந்த
கரங்களைப்
பகர முடிவதில்லை.

தகரங்களைத்
தங்கங்களாக்கிய பணிக்கு
தரணியில் நிகரேது?

"அவனருளாலே
அவன்தாள் வணங்கி"
என்பதுபோல்
ஆசான்களாலேயே
அறிவு பெற்றோம்,
அவர்களைத்
துதிக்கிறோம்.

வாழ்ந்தாரைப் பின்பற்றி
வாழ்வாங்கு வாழ்தலும்
வழி வருவோரை
வாழ வைத்தலும்
ஆசிரியப் பணியாம்.

உயர ஏற்றும் ஏணி
மேலே ஏறுவதில்லை.
கரை சேர்க்கும் தோணி
தரைக்கு வருவதில்லை.
அவற்றின் பணியே
ஆசிரியப் பணியுமாம்.

தன்னிலும் மேலாகத்
தன்னைச் சேர்வாரை
உயரச் செய்தல்
உயர்பணி என்பர்.
உயிர்ப்பணி என்பர்.
அதில் மகிழ்வுறுவர்.

அத்தனை
ஆசிரிய தத்துவங்களும்
மேலாக
அமையப் பெற்றவருள்
ஆசிரியை
திருமதி. சுரமஞ்சரி
பாலேந்திரராசா
அவர்களைக்
காண்கிறேன்.

அஞ்சு வயதுப்
பிஞ்சுகளோடு
கொஞ்சிக் குலவி
அறிவூட்டிய
அழகிய பேற்றிற்கு
வாழ்த்துகள்.

அறியாப் பருவம்
தவறுகள் தப்புகள்
ஆற்றும் பொழுதில்
சரி எது என்று
தட்டி அடக்கிய
வழி காட்டிக்கு
வாழ்த்துகள்.

முட்டி மோதி
முரண்படும் போதில்
உற்று அவதானித்து
ஒற்றுமை போற்றி
ஒருதாய் உறவென்று
ஊட்டிய உணர்வுக்கு
வாழ்த்துகள்.

"இன்றைய சிறுவர்
நாளைய தலைவர்"
என்னும் உணர்வை
இதயத்தே ஏற்றி
இலட்சியப் பாதை
எடுத்து இயம்பிய
கலங்கரை விளக்கிற்கு
வாழ்த்துகள்.

நியமனம் பெற்றது முதல்
பணி ஓய்வுவரை
அவரின் சேவைகள்
மகத்தானவை.

பசுமைநிறை
மரகத மணியாய்
பாரில் சிறந்தோங்க
தன் ஓய்வுப் பொழுதில்
சகல வளங்களுடனும்
குடும்ப உறவுகளுடனும்
இன்புற்று இனிதே இருக்க
இறையாசி வேண்டி
மனமார வாழ்த்துகிறேன்.

**திரு. முருகேசு சிவஞானம்**
**ஓய்வு நிலை ஆசிரியர்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# நெஞ்சமதில் விஞ்சிய நட்பாய்....

சுரங்களைத் தருகின்ற மஞ்சரியாய் அந் நாட்களில் திருமதி.சுரமஞ்சரி பாலேந்திரராசா ஆசிரியர் திகழ்ந்தார். காந்தக் கண்களால் கவரும் ஈர்ப்பாய் எல்லோருடனும் கள்ளமில்லாப் புன்சிரிப்பு நேர்கொண்ட பார்வையுடன் பணி சிறக்க புரிந்திட்ட சேவைகள் ஏராளம். இணையில்லா இணையர்களாய் நாமிருவரும் பாடசாலைக் காலங்களில் விளையாட்டுப்போட்டி தொடக்கம் ஆக்கத்திறன், அழகியற்போட்டிகள், மாணவர் ஒழுக்கம் என பல்தரப்பட்ட பணிகளை ஒருங்கே செவ்வனே நிறைவேற்றியிருந்தோம். அந்நாட்களில் உறவாடிய நட்பினை என்றும் மறக்கமுடியாது. அது பசுமையான நினைவுகளாய் இன்றும் உள்ளத்தில் நிலைத்திடும்.

காலத்தால் அழியாத கல்விக் காலத்தில் நிஜத்தில் உண்மை நண்பர்களாய் வலம்வந்த பொற்காலம் அது. ஆசிரியர் தினமதில் இணைந்தே நடனமாடியும், நாடகம் நடித்தும், எல்லோர் பாராட்டையும் பெற்றுக்கொண்ட நாட்கள் இன்றும் அழியா நினைவுகளாய் நெஞ்சமதில் உள்ளது. இன்று தனது சேவையிலிருந்து ஓய்வுபெற்றுச் செல்லும் ஆசிரியர் தனது ஓய்வுகாலத்தில் உடல் உள ஆரோக்கியத்துடனும், சகல செல்வங்களுடனும், சீரும் சிறப்பும் கொண்டுவாழ என்றென்றும் வாழ்த்துகின்றேன்.

அன்றும் இன்றும் என்றும் உத்தம நண்பர்களாய் தொடர்ந்தே செல்வோம்.

**திருமதி.கஜலக்சுமி ரவீந்திரன்**
**முன்னாள் கிளி / புனித பற்றிமா பாடசாலை**
**ஆங்கில ஆசிரியர்**
**(அவுஸ்திரேலியா)**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# குறைவற்ற நிறைகுடம்....

எமது மூத்த ஆசிரியை
திருமதி. பாலேந்திரராசா சுரமஞ்சரியின்
பணி ஓய்வானது பாடசாலைக்கும்
வீட்டிற்குமான அவரது தினசரிப் பயணங்களின்
ஓய்வாக அமையுமேயன்றி ஆசிரியப் பயணத்தின்
முற்றுப்புள்ளியாக என்றுமே நாம் கருத முடியாது.
"முதுமை என்பதே அறிவினதும் அனுபவத்தினதும்
முதிர்ச்சிக்கான அடையாளம்" என்று கொள்ளப்பட
வியலாத சூழலில் அவ்விரண்டில் குறைவற்ற நிறை
குடத்தை நான் தலைவணங்கிப் போற்றுகின்றேன்.

**"எண்ணென்ப ஏனை யெழுத்தென்ப இவ்விரண்டுங்
கண்ணென்ப வாழு முயிர்க்கு"**

என்ற வள்ளுவப் பேராசானின் வார்த்தைப்படி
இளைய தலைமுறையின் களையெடுத்து அவர்தம்
இரு கண்களையும் திறந்து வைக்கும் சேவைக்காகத்
தனது வாழ்க்கையின் பெரும் பாகத்தை உருக்கி
ஊற்றியுள்ளார்.

ஆய கலைகளில் அர்ப்பணம், ஆன்ம ஈடேற்ற ஆர்வம்,
தலைக்கனம் கொள்ளாத் தன்னடக்கம் என்று
எண்ணிடலங்காத் தனித்துவங்களைத்
தன்னிலடக்கிய தனியாளுமை.
வேர்களால் வாழ்ந்த இந்த ஆசிரியத்துவம்
இனிவரும் நாட்களில் அவருடைய விழுதுகளால்
தாங்கப்படும்.

**திரு.இ.ரகு**
**ஆசிரியர்**
**கிளி / சிவபாத கலையகம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பிரியத்திற்குரிய தோழி....!

ஆயிரம் முறை பார்த்திருப்பேன்
என் ஆசான் சுரமஞ்சரியை
ஆனாலும் இன்று நீங்கள்
புதியவளாக மரகதவிழா நாயகியாக
பட்டுடுத்தி வாஞ்சையில் நிரம்பி
வளையல் பூட்டி
கருமை அருவியாம் உன் கூந்தலில் மலர் சூடி
ரோஜா கன்னங்களாய் சிவக்க
மேலும் வண்ணம் சேர்க்க
மங்கையவள் கால் சிலம்பொலிக்க
அன்னமாய் அசைந்து
கரம்பற்றிய கணவனுடனும்
தூர இருந்து நோக்கும் ஈன்றெடுத்த மகளுடனும்
அருகில் வரும் மகனுடனும்
விழாக்காணும் நேரமதில்
உளமார வாழ்த்துகின்றேன்.

வரவேற்புக்கு இருக்கும் வாசனை மணம்
வழியனுப்புவதில் இருப்பதில்லை
நினைவுகளின் பெட்டகங்கள்
நிரம்பி வழியும் போது சாவியோடு
நீங்கள் விலகிச் செல்கின்றீர்கள்
நீங்கள் பறந்து செல்கின்றீர்கள் என்பதன்
சோகம் உங்கள் வரவின்மையால்
தெரிகின்றது.

எங்களுடன் இருக்கும் போது கிளைபரப்பி
உங்கள் ஞானத்தால் எல்லோரையும் அரவணைத்து
வந்தோரை வரவேற்று புகழ் பூத்த உங்கள்
ஓய்வுகாலத்தை எங்கள் மனங்கள் ஏற்க மறுக்கின்றன



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எங்கே திரும்பவும் சேவையில் அமரமாட்டீர்களா?
என உள்ளம் ஒருகணம் கனக்கின்றது.

கண்ணீர்த் துளிகள் விலகாமல் பெருகினாலும்
மகிழ்வின் துவலைகள் அதைத் துவட்டிவிடுகின்றன
நடந்து முடிந்த நிமிடம் வேறு
ஆழத்தில் விழுந்தாலும் காலுடைவதில்லை
அலை தொடர்ந்து எழுகின்றதால்
உங்கள் வருகையில் அனைவரையும்
மகிழ்வூட்டீனீர்கள் !
சிந்தனை, சொல், செயலால்
எல்லோரையும் அரவணைத்தீர்கள்!
எப்போதும் சிரித்த வதனத்துடன்
பாடசாலை வளாகத்தை வலம் வந்த
எங்கள் சுரமஞ்சரியின் ஓய்வு சிறக்க
வாழ்த்தி நிற்கின்றோம்- வாழ்க!

**திருமதி.பா. எட்வின்டியூக்**
**ஆசிரியை**
**கிளி / இந்து ஆரம்ப வித்தியாலயம்**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சேவையின் சேவகியே! மரகதவிழா நாயகியே!

அன்பால் அனைவருடனும் உறவாடி - ஆசையுடன்
ஓய்வுவரை உழைத்திட்ட உத்தமியே!
ஆசிரியத்தின் மகத்துவத்தை அறைகூவி நிற்கும்- எங்கள்
சேவையின் சேவகியே! சுரமஞ்சரி ஆசிரியரே!- உங்களை
வாழ்த்துகிறேன்! வாழ்த்துகிறேன்! மனதார வாழ்த்துகிறேன்!

ஆண்டுகள் பல ஆசிரிய சேவையாற்றி
அன்புக் கணவனுடன் இல்லறத்தை நல்லறமாகப் பேணி
ஆசையாக இரண்டு பிள்ளைகளைப் பெற்று - அகிலம்போற்ற
அன்புக்கு இலக்கணமாக வாழ்ந்த ஆசிரியரே! வாழ்க!

அன்பான உள்ளம் அனைவரையும் கவரும் பேச்சு
அக்கறை உணர்வுடன் பிள்ளைகளுக்குக் கற்பிக்கும் ஆற்றல்
அன்புப் பெற்றோரை அரவணைக்கும் தன்மை
அத்தனையும் ஒருங்கே பெற்ற அன்பு ஆசிரியரே வாழ்க!

பண்பாடு பக்குவம் அத்தனையும் பேணி
பாசத்துடன் அத்தனை ஆசிரியர்களையும் இணைத்து
பணியிலும் மிகுந்த ஆர்வத்துடன் செயற்பட்டு
பக்குவமாய் பாடசாலையில் பவனிவந்த ஆசிரியரே வாழ்க!

பழகிய நாட்கள் சிலவானாலும் - உணவு
பரிமாறும் போது உங்களிடத்தே ஏற்பட்ட அன்பு
சேவையில் ஓய்வுபெற்றுச் செல்லுகின்ற போதும்
அகமகிழ்ந்து வாழ்த்துகிறது என் உள்ளம் ஆசிரியரே வாழ்க!

அரச சேவையில் ஆனந்தமாக ஓய்வுபெறும் -நீங்கள்
கணவர், மக்கள் மருமக்கள், பேரக்குழந்தையுடன்
ஆனந்தமாய்ப் பொழுதைக் களித்து வாழவேண்டி
சேவையின் சேவகியை சிறப்புடன் வாழ்த்துகிறேன்.

**திருமதி.சுகந்தினி கேதீஸ்வரன்**
**கிளி / இந்து ஆரம்ப வித்தியாலயம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# என் தலைசிறந்த அம்மாவிற்கும், ஆசானிற்கும் இதயம் கனிந்த நல்வாழ்த்துக்கள்

நான் கண்ட மிகச்சிறந்த அம்மாவும், ஆசிரியரும் என் அம்மா தான் என்று கூறினால் மிகையாகாது. அவர் அம்மாவாக, ஆசிரியராக மட்டும் சிறந்து விளங்குபவரல்ல. தான் ஏற்றிருக்கும் அனைத்துப் பாத்திரங்களிலும் மிகவும் சிறந்து விளங்குபவராவார். அவர் தனது கடமைகளிலிருந்து என்றுமே துளி கூட விலகி நான் பார்த்ததில்லை. எனக்கு நல்ல அம்மாவாக, என் கணவருக்கு நல்ல மாமியாக, என் மகளுக்கு சிறந்த அம்மம்மாவாக எப்போதும் எம் நலனில் அக்கறை செலுத்தும் ஓர் உன்னத ஜீவனாக இருக்கிறார். என் தந்தை நோய்வாய்ப்பட்டிருந்த காலங்களிலும், போர்ச்சூழல்களிலும் எத்தனையோ துன்பங்களைத் தாண்டி, சோர்ந்துவிடாமல் மனத் தைரியத்துடன் எம்மைக் காத்து வளர்த்தவர்.

தன் கடமை முடிந்துவிட்டது என்று முற்றுப்புள்ளி வைக்காமல் தன்பிள்ளைகளின் சந்தோசம் தான் தன்னுடைய சந்தோசம் என்று தன்னால் இயலுமான அனைத்தையும் எமக்காக முகமலர்வுடன் செய்து எந்த எதிர்பார்ப்பும் இன்றி அன்றும் இன்றும் எமக்காக வாழ்பவர் என் அம்மா என்பதில் எவ்வித ஐயமுமில்லை. எமக்கு புதுப்புது ஆடைகளை அணிவித்து அழகு பார்ப்பதில் இன்பம் காண்பவர். எப்படியும் வாழலாம் என்பதைவிடுத்து இப்படித்தான் வாழவேண்டுமென்று எமக்கு வழிகாட்டுபவர். ஒரு நற்பண்பு மிகுந்த பிள்ளையை பெற்றதாய் தன் பிள்ளையை நினைத்து பெருமைகொள்வது வழக்கம். இன்று நான் இவ்வாறான ஓர் அம்மாவிற்கு மகளாகப் பிறந்தது எனக்குக் கிடைத்த வரம் என்று நினைத்துப் பூரிப்பு அடைகிறேன். சுரமஞ்சரி ஆசிரியரின் மகள் என்று பிறர் கூறுவதைப் பெருமையாக எண்ணுகிறேன்.

எனது தரம் 1,2 ஆரம்பக்கல்வியை என்னுடைய அம்மாவிடமே கற்றேன். நான் போட்டிகளில் கலந்துகொள்ளும்போது பேச்சு, கவிதை எழுதி என்னைப் பயிற்றுவித்து அனுப்புவார். அவர் எவ்வாறு எமக்குச் சிறந்த அம்மாவோ, அவ்வாறே அவர் ஒரு சிறந்த ஆசிரியருமாவார். ஒவ்வொரு வருடமும் அவரின் வகுப்பு மாணவராகத் தெரிவு செய்யப்படும் ஒவ்வொரு மாணவரும் அதிஷ்டம் பெற்றவர் என்று நான் எண்ணுவது வழக்கம். அவர் கல்வியை மட்டுமல்ல நல்ல பழக்கவழக்கங்களையும் மாணவர்களுக்கு ஊட்டுவார். அம்மாவின் முயற்சிகளையும் ஆர்வத்தையும் நேரில் பார்த்து வளர்ந்தவள் நான். ஒருபோதும் அவர் ஏனோதானோ என்று எந்தவிடயத்தையும் செய்ததில்லை. தன்னுடைய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வகுப்பறை எப்போதும் அழகாகவும், சுத்தமாகவும் இருக்கவேண்டும், மாணவர் பதிவேடு, பாடப்பதிவுப் புத்தகங்கள் உறைபோட்டு அனைத்துப் பதிவுகளும் மேற்கொள்ளப்பட்டு அழகாக இருக்கவேண்டும், மேசை விரிப்புகள் ஒழுங்காக இருக்கவேண்டும், மாணவர்கள் சுத்தமாக, நற்பண்பு மிக்கவர்களாக இருக்கவேண்டுமென்பதில் மிகக் கவனம் செலுத்துவார்.

தானே புதிதுபுதிதாக யோசித்து மாணவர்களை ஊக்குவிக்கும் செயற்பாடுகள், அவர்களின் வெற்றிகளுக்கு தன்னால் இயன்ற பரிசில்களை வழங்கும் செயற்பாடுகளை முழுமனதுடன் செய்வார். இதெல்லாம் எனக்கு எப்போதும் ஆச்சரியத்தையே உண்டாக்கும். வீட்டிலோ பாடசாலையிலோ ஏதாவது ஒரு நிகழ்வாக இருந்தால் அவரின் முன்னாயத்தம் சிறப்பாக இருக்கும். திட்டமிடாமல் எதையும் செய்யமாட்டார். அவர் ஒரு மிகச்சிறந்த தலைமையாக விளங்குவார். அவரின் ஒவ்வொரு செயற்பாட்டிலும் ஒரு தெளிவும், தூர நோக்கும் காணப்படும். அதிகாலையில் எழுந்து காலை உணவு, மதிய உணவு செய்து வைத்துவிட்டு காலந்தாழ்த்தாமல் உரிய நேரத்தில் பாடசாலையில் நிற்பார். பாடசாலை வேலைகளை வீட்டில் வந்து சரியாகச் செய்து முடிப்பார். அவரை யாரும் "ஏன் அது செய்யவில்லை ஏன் இது செய்யவில்லை" என்று கேட்க இடமளிக்காது தனது கடைமைகளை உரிய நேரத்தில் கனகச்சிதமாக செய்து முடிப்பார். அனைவரையும் தன் செயலால் வியக்கவைத்து அனைவர் மனதிலும் நீங்காத இடம்பிடிப்பவர். என் தாயார் பாடசாலைக்கு அதிகம் விடுமுறை எடுத்ததை நான் பார்த்ததேயில்லை. "இன்று நில்லுங்கள் அம்மா " என்று நாம் கேட்டால் "அங்கே எனக்காக 25 பிள்ளைகள் காத்திருப்பார்கள்" என்று கூறிப் பாடசாலை செல்வார். எனக்குத் தேவை ஏற்பட்ட மிக முக்கிய தருணத்தில் அவர் தன் கடமையைச் சரியாகச் செய்து சென்றார். என்னுடன் லண்டனில் நின்ற இரண்டு மாதமும் அடிக்கடி தன்னுடைய மாணவர்கள், வகுப்பறை பற்றி ஆசிரியர்களிடமும், பெற்றோர்களிடமும் தொலைபேசி மூலம் கேட்டறிந்தவண்ணமே இருந்தார்.

என் அம்மா எப்போதும் பிறரின் நலனில் அக்கறை செலுத்துபவர். "எனக்கு ஒன்றுமே தேவையில்லை; உங்களால் இயலுமான நேரத்தில் ஏழைகளுக்கு உதவி செய்யவேண்டும் அதுதான் எனக்கு சந்தோசத்தைத் தரும்" என்று அடிக்கடி எமக்குச் சொல்லுவார். பிறர் தன்னிடம் வந்து தங்களின் கஷ்ரங்களைச் சொன்னால் அதை எம்மிடமும் பகிர்ந்துகொள்வார். தன்னால் இயன்ற உதவிகளையும் செய்துதவுவார்.

ஓர் ஆணின் வெற்றிக்குப் பின்னால் ஒரு பெண் இருப்பார் என்பார்கள். அதற்கமைய என் தந்தையின் வெற்றிக்குப்பின்னால் என் தாயார் இருக்கும் அதே சமயம் என் தாயின் வெற்றிக்குப்பின்னால் என் தந்தை இருக்கிறார் என்பதில் எவ்வித ஐயமுமில்லை. அம்மாவின் ஆசிரியத்தொழிலுக்கு என்றுமே அப்பா இடையூறு செய்ததில்லை. மாறாக தன்னால் இயன்ற முழுப்பங்களிப்பையும் சலிக்காது செய்வார். அப்பா சித்திரம் வரைவதில் திறமையானவர். தொழில்நுட்ப வசதிகள் அற்ற ஆரம்ப



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலங்களில் அம்மா கற்பிப்பதற்காக பல சித்திர வேலைப்பாடுகளையெல்லாம் அப்பா செய்துகொடுப்பது இன்னும் எனக்கு நினைவிருக்கிறது. பாடசாலைக் கண்காட்சிகளில் எனது தந்தையின் ஆக்கம் கட்டாயம் இருக்கும். அதிகாலை எழுந்து அம்மாவிற்கு உதவி செய்வார். உரிய நேரத்தில் பாடசாலைக்குக் கொண்டு சேர்ப்பார். அவ்வாறே அம்மாவும் அப்பாவின் முன்னேற்றத்திற்கு பக்கபலமாக இருப்பார். இன்றும் அவர்கள் கடினமாக உழைக்கும் சிறந்த உழைப்பாளிகள் என்று கூறுவதில் நான் மிக்க பெருமையடைகிறேன். இவ்வாறான பெற்றோர் கிடைத்தது நானும் என் தம்பியும் என் குடும்பமும் செய்த பாக்கியம் என்று எண்ணிப் பூரிப்படைகிறேன். கடவுளிற்கு நன்றி கூறுகிறேன்.

இன்று தன்னுடைய 33 வருட ஆசிரியப் பணியில் இருந்து ஓய்வுபெறும் என் அன்புத் தாயாரிற்கு மனமார்ந்த வாழ்த்துக்களையும், பாராட்டுக்களையும் தெரிவித்து நீண்ட ஆயுள், ஆரோக்கியத்துடன், சகல சௌபாக்கியங்களும் பெற்று என்றும் சந்தோசமாக வாழவேண்டும் என்று எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்தித்துக்கொள்கின்றேன்.

உங்கள் அன்பு மகள்
திருமதி. நிதர்சனா செந்துஜன்






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கல்விப்பணியில் முப்பத்து மூன்று ஆண்டுகள் கண்ட சுரமஞ்சரி ஆசிரியைக்கு....

புனித சேவையாகிய ஆசிரிய சேவையை கண்ணியத்துடனும், கடமையுணர்வுடனும், கட்டுப்பாட்டுடனும், அர்ப்பணிப்புடனும் ஆற்றியவர் திருமதி.பாலேந்திரராசா சுரமஞ்சரி அவர்கள். வசீகரமான குரலாலும், ஆளுமையான பேச்சாலும், எல்லோரையும் தன் பால் ஈர்த்து தனக்குரிய பொறுப்பைச் சரிவரச் செய்தவர்.

2010 காலப்பகுதியில் இருந்து 2015 காலப்பகுதிவரை கிளி / கிளிநொச்சி மகாவித்தியாலயத்தில் நாம் இருவரும் ஒன்றாகக் கடமை ஆற்றினோம். எனக்கு நல்லதொரு வழிகாட்டியாகவும், ஆலோசனை கூறுபவராகவும் இருந்தவர். எந்தவொரு பிரச்சினையையும் இலகுவாகத் தீர்க்க நினைப்பவர். பல மாணவர்களின் மனதில் நீங்கா இடம் பிடித்துள்ளார். அப்படிப்பட்ட இந்த ஆசிரியையுடன் மீண்டும் 2019 தொடக்கம் இன்றுவரை கிளி / இந்து ஆரம்ப வித்தியாலயத்தில் கடமையாற்றினேன் என அகமகிழ்கின்றேன்.

எந்தப் பொறுப்பை எடுத்துக்கொண்டாலும் சரிவரவும், நிதானத்துடனும், கூட்டுணர்வுடனும், விட்டுக்கொடுப்புடனும் நிறைவேற்றுவார் என்பதில் அச்சமில்லை. தன்னுடைய ஆசிரியப்பணியை நிறைவுசெய்து தனது குடும்ப வாழ்க்கையை இனிதாக நிறைவேற்ற இறைவனின் ஆசியைப் பெற்று வாழ்த்துகின்றேன்.

**திருமதி.இந்துமதி ஞானதரன்**
**கிளி / இந்து ஆரம்ப வித்தியாலயம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கண்ணியக் கடமையாளர் என் அம்மா....

அன்னை ஈன்றெடுத்த
தருணத்தில்
கண்டறிந்தேன்
என் முதல் தெய்வத்தை.

மாதா பிதா குரு தெய்வம்
மானிடர் வாழ்வில்
நிச்சயிக்கப்பட்டவர்கள்.

எனக்கு மாதாவும் குருவும்
என் அன்னையே.

அன்பை ஊட்டி
அறிவை ஊட்டி
வளர்த்தெடுத்த தெய்வம்.

வகுப்பறையிலிருந்தல்ல
கருவறையிலிருந்தே
அறிவு புகட்டியவர்
என் அன்னை.
அப்படித்தான்
எண்ணுகிறேன்.

கடைக்குட்டி ஆண்மகன்
செல்லம் என்பவற்றுக்கு மேலாக
கண்டிப்புடன்
நற்பழக்கவழக்கங்கள்
அறிதற்திறன்
தேடல் என
நல்லனவற்றை எல்லாம்
நாட வழிகாட்டியவர்
தந்தையுடன்.

விஞ்ஞானமும் தொழிநுட்பமும் எனும் துறையில்
பல்கலை வரை காலூன்றவைத்த
முயற்சியாளர்.

ஊரார் பிள்ளைகளை ஊட்டி வளர்க்கும்
உன்னத பணியுடன்
வீட்டுக் கடமைகளையும்
சரிவரச் செய்த கண்ணியக் கடமையாளர்.

அன்னையின் ஆசைகள்
ஒன்றல்ல இரண்டல்ல
ஆயிரம் உள்ளதையா
பாடலுக்கு ஏற்றாற்போல்
அவரது நம்பிக்கையை
நான் காப்பேன்.

எனக்கு வாய்த்த அன்னைபோல்
எல்லோர்க்கும்
அன்னை வாய்த்தால்
எங்கும் நலமாகும் என அகமகிழ்கிறேன்.

குறித்த காலத்தின்முன்
பணியோய்வு பெறும்
அன்னையால் மேலும் நாம்
நலமுறுவோம்.
ஓய்வில் என் அன்னை
சிறப்புற்றிருக்க
இறையாசியை
வேண்டுகிறேன்.

**அன்பு மகன்**
**நிவேதிகன்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# அன்புச்சகோதரி இவள்....

அன்புச் சகோதரி சுரமஞ்சரியை எனது சகோதரன் சங்கர் மூலமாக அவர்கள் கல்வி கற்கும் காலங்களிலிருந்தே எனக்குத் தெரிந்திருந்தாலும், எமக்கு ஆசிரிய நியமனம் கிடைத்ததிலிருந்து தான் நெருங்கிப்பழகும் வாய்ப்புக் கிடைத்தது. இதைவிட, புனித பற்றிமா பாடசாலையில் சிறிதுகாலம் இவரோடு கல்வியும் கற்பித்தேன். மிகவும் அன்பான ஒருவர். எப்போதும் சிரித்த முகத்துடன் கற்பித்தலில் ஈடுபடுவார். மாணவர்களைக் கவரும் வகையில் அவர்களைக் கையாளுவதில் மிகச் சிறந்தவர். நான் புலம்பெயர்ந்து வந்தாலும், அவ்வப்போது இவரின் கற்பித்தல் பற்றி அறிந்து மகிழ்வடைந்திருக்கிறேன். சகோதரியின் ஓய்வுக்காலம் மகிழ்வானதாகவும் சுகமானதாகவும், வளமானதாகவும் அமைய மனதார வாழ்த்தி மகிழ்வடைகிறேன்.

**யசோதை சந்திரகுமார்**
**(சுவிஸ்)**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# புன்னகையரசியை வாழ்த்துகிறேன்....

கோபப்பட்டுத் திட்டினாலும்
நாங்கள் கோபித்துக்கொள்ளமாட்டோம்
என்மனம் புண்படா வண்ணம்
நீங்கள் உதிர்க்கும் புன்னகையால்
மனதை எல்லாம் அபகரித்தீர்
புரியாத புதிராகவே இருந்துள்ளீர்
பல நேரங்களில்....

வர்ணிக்க இயலா அன்பு
வார்த்தையில் அடங்காப் பொறுமை
உணர்வோடு உறைந்த கடமை
புகைப்படமாக கைது
செய்ய முயன்றிருக்கிறேன்,
முடியவில்லை.
நிழற்படமாக கைது செய்து மகிழ்கின்றேன்
நினைவுகளை....

பல சாதனையாளர்களை உருவாக்கி
எம் சந்ததிகள் சிகரம் தொட
நாம் தொலைத்த வாழ்வின் தேடல்களை,
வாழ்வின் அடையாளங்களை,
வாழ்வின் வழிகளை
வகைவகையாய் வகைப்படுத்தி
எம் சந்ததிகள் அழியாத புகழ் பெற
வளமோடு வாழ உன்னதமான சேவை
அளப்பரியது

தான் பெற்ற கல்வியை
என் பிள்ளைக்கு
ஊட்டி வளர்த்தெடுத்து
என் பிள்ளை தரம் ஐந்தில்
கல்விகற்கும் போது
அவளது கல்விக்காக
பாரிய முயற்சியிலும் ஈடுபட்டு
கடமையுணர்வோடு
திகழ்ந்தவர் நீங்கள்.
என் பிள்ளை பல
வெற்றிகளை காணும் போது
என் நினைவில்
வருவது சுரமஞ்சரி ரீச்சர்.
ஒவ்வொரு மாணவரின்
இலட்சியத்திற்குப் பின்னால்
ஆசிரியர் என்ற மாபெரும் சக்தி உண்டு.

அயல்வீட்டு அன்னையவர்
அதிகமாக எங்களை
நேசிக்கும் தாயுமானவர்
ஈர் ஐந்து ஆண்டுகளுக்கு மேலாய்
ஆசிரியர் அவர்களின்
துணைவர் பாலேந்திரராசா
அவர்களின் பதிப்பகத்தில் வேலை
பார்த்துக்கொண்டிருப்பவள் நான்
எனக்கு நல்ல வழிகாட்டியாகவும்
இருவரும் திகழ்வதை
மறுக்கவோ ! மறக்கவோ! முடியாத
நினைவுகளும் கூட.....நீங்கள் நிடுழி
காலம் வாழ வாழ்த்துகிறேன்

**பெற்றார் , அயலவர்,**
**திருமதி. ரமேஸ் விஜிதா**
**ஜெயந்திநகர், கிளிநொச்சி.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# அறிவுச்சுரங்களை மாலையாகத் தொடுத்து மஞ்சரியாக வலம் வரும்

என் அன்பு "சுரமஞ்சரி" ஆசிரியருக்கு மரகதவிழா....

எத்தனை அன்பு
எத்தனை அரவணைப்பு
எத்தனை அறிவுரை
எத்தனை ஆலோசனைகள்
உங்களுடன் வாழ்ந்த
உங்களால் செதுக்கப்பட்ட
நினைவுகள் பசுமையானவை



பெயரோ ஒரு புதுமை
அழகில் ஒரு ஓவியம்
இயல், இசை, நாடகங்களில் அரசி
புன்னகை நாயகி
தொண்ணூறுகளின் பேரழகி
என் மனம் கவர்ந்த மங்கை
அன்னைக்கு அன்னை
தோழிக்குத் தோழி
ஐம்பந்தைந்து கடந்தென்ன
ஆயிரம் வந்தென்ன
என்றும் இளமையுடன்
தமிழ் மணம் பரப்பி
நல்லறிவை ஊட்டி
நீங்கள் பல்லாண்டு வாழியவே!
என இறையாசி வேண்டி நிற்கும்.

உங்கள் மாணவி
**Dr. காயத்திரி திலீபன்**
**உருத்திரபுரம்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# தாயினும் இனிய பெருந்தகை....

தேன் தமிழ் மொழி வளம் - சிந்தை மிகு
வான் புகழ் அறிவு நலம் ஒருங்கே - யான்
மேன்மை யுற மேதினியில் வந்துதித்த
சான்றாண்மை மிகு ஆசிரியரே! - வந்தனங்கள்

அகரம் தொடங்கி யான் வெற்றிச்
சிகரம் தொட சீர்மை காட்டி
உவப்பாக அறிவூட்டி வழிகாட்டி
செகத்தில் சாதனைபுரிய கால் கோலினீர்!

பதம் நிறை அறிவுப் பெருக்கு
இதம் நிறை மொழிப் பகிர்வு
விதம் நிறை ஆரம்பக் கற்பித்தல்
நிதம் முறை நிலைத்தது என்னில்

நாற்றிசை புகழ் ஓங்க மிளிரும்
போற்றிசெயும் குருவே! என்றும்
சாற்றும் புகழ் மொழியால் எஞ்ஞான்றும்
சீர் உற்று வாழிய! வாழியவே!

கல்விக் கருவியில் இலட்சியம் தொட
நல் வழி சமைத்த ஆரம்ப ஆசிரியையை
பல்லாண்டு வாழ்க வாழ்கவென
நல் நலம் ஓங்கவென வாழ்த்தி வணங்குகிறேன்.

**வரதன் ஆர்த்தி**
**3ஆம் வருடம்**
**பொறியியல் பீடம்**
**யாழ் பல்கலைக்கழகம்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எங்களின் சுரமஞ்சரி ஆசானை வாழ்த்தி வழியனுப்பும் தருணம்

ஏற்றம் பெற்றிட மாணவர்களுக்கு
கற்றுக் கொடுத்த எமது
ஆற்றல் மிகு ஆசானே!
போற்றி உம்மை பாடுகின்றோம்.

பத்திரமாய் எமக்கு கல்வியை
சித்திரமாய் செதுக்கித் தந்து
நித்தமும் ஒழுக்கத்தைப் போதித்து!
முத்திரை பதித்திடச் செய்தவரே!

வித்தகராக எம்மை உருவாக்கி
எத்திசையும் மிளிர அயராது
இத்தரையில் உழைத்த உத்தமியே!
எத்தனை ஆண்டானலும் உம்மை மறவோம்.

இன்முகம் காட்டி எம்முடன்
அன்புடன் அளவளாவி என்றும்
இன்மொழி பேசிச் சிரித்தே
அன்னையாய் நிற்பார் எம் ஆசான்

கடமை தனையே கண்ணாக
திடமாய் மனதில் கொண்டு
தடங்கள் பலதை பதித்திடச் செய்த
விழா நாயகியே வாழ்க!

உங்கள் அன்பின்
மாணவ மாணவிகள்
தரம் – 5B



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# என் சுரமஞ்சரி ஆசிரியருக்கு! மனம் நிறைந்த வாழ்த்துகள்....

பேரன்பிற்குரிய எம் கல்லூரியின் சுரமஞ்சரி ஆசிரியருக்கு அன்புடன் வாழ்த்துக்களை வழங்குகிறேன்.சேவை காலத்தை நிறைவு செய்த உங்களுக்கு சிறியேனின் வாழ்த்துக்கள். எத்தனை ஆண்டுகள் கடந்தாலும் மாணவர்கள் உங்கள் பெயர் சொல்வார்கள்.

சுறுசுறுப்பானவர், புன்னகை பூத்த முகம், பள்ளிக் காலத்தில் எம் தாயாய் எங்களை அன்பாய்ப் , பண்பாய்க் கண்டிப்பாய் நெறிப்படுத்திய எம் ஆசானுக்கு மரகதவிழா வாழ்த்துக்கள். அனைவரையும் ஒன்றுபோல் அரவணைக்கும் உங்கள் தாயுள்ளம், உங்களின் மேலான ஆளுமைத்திறனும் ஆழ்ந்த புலமையும் அன்பான குணமும் என் சக தோழர்களுக்குப் பிடித்தது.

எளிமையான நடத்தையைக் கொண்டவர். தனது பாடசாலைக் காலத்தில் இரவு பகல் பாராது அர்ப்பணிப்பு மிக்க சேவையை வழங்கியவர். வானத்தில் மின்னிடும் நட்சத்திரமாய் கல்வியினை எமக்களித்த ஆசான்.உங்களுடன் எமது பயணம் மூன்று ஆண்டுகள். ஆயினும் இனிமையான நினைவுகள் பல. உமக்கோ இன்று பணிநிறைவு எமக்கோ உம்மை விட்டுப்பிரிய மனமில்லை.

உங்கள் ஓய்வுக்காலம் நிறைந்த மன மகிழ்ச்சியோடு நல்ல உடல் ஆரோக்கியத்தோடும் அமைந்திருக்க எல்லாம் வல்ல இறைவன் அருள்புரிவாராக!

**என்றும் அன்புடன்**
**உங்கள் மாணவன்**
**த.யதுமினன்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எம் இனிய குருவிற்கு வாழ்த்துக்கள்...!

வாழ்க்கை ஒரு பயணம்
சில உறவுகள் நிலைப்பதில்லை,
சில உறவுகள் களைப்பதில்லை,
இப்படியாக மனித வாழ்வில்
எத்தனை எத்தனை பரிமாணங்கள்!
ஒவ்வொரு வளர்ச்சிக்கும்
ஒவ்வொரு ஆசானே காரணமாகின்றார்.
அவரே எங்கள் சுரமஞ்சரி ரீச்சர்.

எங்களுக்கு மட்டும் இவர் அம்மா....
எங்களுக்கு மட்டும் இவர் அப்பா....
எங்களுக்கு மட்டும் இந்த உறவு....
எனச் சொல்ல எத்தனையோ
பந்தங்கள் உண்டு வாழ்வினிலே....
ஆனால் எங்களுக்கு மட்டும் தான்
இவர் ஆசான் எனச் சொன்னவர் எவருமுண்டோ....
ஆனால் நாங்கள் பல தடவைகள் எண்ணியுள்ளோம்.
எங்கள் வாழ்க்கைப் பாதையில்
எத்தனையோ ஆசான்களைக் கண்டோம்.
ஒவ்வொரு படிக்குப் பிறகும் மறுக்க முடியாத பிரிவு
இதோ வந்தது சுரமஞ்சரி ரீச்சர் விடைபெறும் நொடியும்....

இலக்கணம் கற்பித்த துரோணருக்கு
அர்ச்சுனர்களின் நன்றி சமர்ப்பணம்.
கற்பித்த காலம் சிறிதே எனினும்
கற்றுக் கொடுத்த கல்விக்கு ஈடு உண்டோ?

**தரம் 3-A**
**மழலைச் செல்வங்கள்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நிழல் தரும் மரமாய் நெஞ்சமதில்....

சுற்றிச் சுழலும் உலகில்
சூட்சுமம் கற்றறிய
நிழல் தரும் மரமாய்
நெஞ்சத்தில் நீங்காத
இடம்பெற்ற ஆசிரியரே!
எத்தனையோ விடைத்தாள்கள்
திருத்திய உங்கள் விரல்கள்
ஓய்வெடுக்க நினைத்ததில்லை....
அதற்கு சான்றாவது,
வகுப்பில் நுழையும் போது
உங்கள் விரலில் பதிந்த
நீல சிவப்புக்கறையும்
வகுப்பு முடியும் போது
கையில் படியும் வெள்ளைக்கறையுமே,
திட்டித் திட்டித் தீட்டாமல்
அன்பு மொழியால்
எங்களைத் தீட்டிய ஓவியரே!
விடைத்தாள் திருத்திய விரல்கள்
காகித கடலை மறந்து
சற்று ஓய்வுவெடுக்கட்டும்
விடியலாய் இருந்த மனம்
புதுவிடியலில் புத்துணர்வு
தினம் கொள்ளட்டும்
உயர உயரப் பறக்கும்
ஊர்க்குருவி ஓர் ஆலமரத்தைத் தேடி வரும்.

**என்றும் அன்புடன்**
**உங்கள் மாணவி**
**சு.ஜெஸ்மியா**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org









Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org









அச்சுப்பதிப்பு, வடிவமைப்பு, வேழன் பதிப்பகம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org